முரசொலி

3 அணு

முரசு 2 | சென்னை | 6—5—55 | வெள்ளி | ஒலி 6

மே தினம்!

—:(★):—

மே தினம்! தொழிலாளர் வாழ்வை வதக்கி அவர்கள் எலும்புகளை மென்று தின்று தங்களின் மேனியை மெருகேற்றிக் கொண்ட முதலாளி வர்க்கத்தின் மென்னியை இறுக்கிக் கொன்றவரின் விழா—பீட்டர்ஸ்பர்க் நகரத்துப் பாட்டாளி மக்கள் பசியெனக் கதறியதற்காக அவர்களை ரத்தத்தில் மிதக்கவிட்டு கோரச் சிரிப்பு சிரித்த கோமரன்களின் குரல் வளையை அமுக்கியவர்களின் தினம்—"எட்டு மணிதான் வேலையென்று கொட்டு முரசே!" எனக் கொடி தூக்கிய "குடல் வற்றி"களின் கொண்டாட்ட நாள் — சிகாகோவில் சிங்க ஏறுகள் நிமிர்ந்தெழுந்து பீடு நடை போட்ட சிங்காரத் திருநாள்.

மலைப்பாம்பினுங் கொடிய மதம் மாய்ந்தது—மக்களின் வாழ்வைக் அடித்து ஏப்பமிட்ட பணக்காரப் பேய்க் கும்பலின் 'பவிசு' குறைந்தது -கஷ்டப்பட்டதை—கண்ணீர் விட்டதை—கலங்கி நின்றதை—கதியிலை எனக் கதறியதை-கண்ணெடுத்தும் பாராமல் கற்களாய் நின்று அறிவைக் காவுகொண்ட கடவுள் கூட்டத்தின் வம்சம் பூண்டற்றுப் போனது—என்ற மகிழ்ச்சியை நரம்புகளில் ஏற்றிக்கொண்டு இரஷ்யப்பாட்டாளி மக்கள்—ஏன், உலகப் பாட்டாளி மக்கள் மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் பிணமாக வீற்றிருக்கிற மாவீரன் லெனினை நினைத்துக் கொண்டு வீர நர்த்தனம் புரிகின்ற வெற்றி விழா!

அயர்வை அச்சத்தால்
போக்கி—ரத்தத்தை
வியர்வைக் குளமாக்கி
வாடுகின்ற பாட்டாளியும்
ஆடுகின்றான்
திருநாளென்று!

(மு. க.)

★

★ மே தின சிறப்பிதழ் ★



வயோதிகம் முற்றி பால பருவத்து மாற்றங்கள் திரும்பவும் தோன்றியிருக்கும் உருவம்—பல்லெல்லாம்தெரியும் பொக்கை வாய்—திரை விழுந்து அவள் அழகான உடலில் ஏதேதோ புரியாத மொழிகளை கிறுக்கி வைத்திருக்கிறது.

மாலையிட்ட மணவாளன் எப்போதோ மண்ணாகி விட்டான் அவன் சமாதியை கண்ணீர்த்துளிகளால்கரைத்துவிட்டு. விதவைக் கோலத்தோடு அவள் அந்தக் கிராமத்திலே இத்தனை ஆண்டுகளாகவும் வாழ்ந்து வருகிறாள்.

ஹூ-லங் மலைத் தொடருக்கும், வேங் பாட்டிக்கும் அந்த சீனத்துக் குக்கிராமத்தில் அறிமுகம் தேவையில்லை. அவள் தான் அந்த வட்டாரத்து மக்களுக்கு மருத்துவச்சி; மஞ்சன நீராட்டி, மக்கட் செல்வங்களுக்கு முதற் பெயர் வைக்கும் மூதாட்டி; பழைய சம்பிரதாயங்களுக்கு 'பராக்'குக் கூறும் சாஸ்திரி; அதை மீறி நடப்போர் மீது அஸ்திரம் பாய்ச்சி அறவழிப்படுத்தும் ஆசான்; புதிய மாற்றங்கள் பூனையைப் போல் பதுங்கி வந்தால், அதன் மீது பாய்ந்து கொன்று, புயலெனப் படையெடுத்தால் அதைப் பல்லிளித்து வரவேற்று, பாராட்டு வாசிக்கும் வகையருவைச் சேர்ந்த மாஜி—வனிதை!

சன்-யாட்-சன் காலத்துப் பயிராயிற்றே என்று வாலிபர்களும், சரீரம் தேய்ந்தும் சலியாத உழைப்பாளி யாயிற்றே என்று பெரியவர்களும் வேங் பாட்டிக்கு எப்போதுமே மதிப்பு வைத்திருந்தனர்.

தாம்பத்ய வாழ்க்கையின் நினைவுச் சின்னமாக அவள் கணவன் அவளிடம் பெண் குழந்தை யொன்றை விட்டுச் சென்றிருந்தான். அதோடு அவள் சுடுகாட்டுக்குச் செல்லும்வரை சோறுபோட்டு, ஜீவனை வளர்க்க இரண்டு 'மௌ' நிலமும் அவள் பெயருக்கு இருந்தது.

அவள் குழந்தை சியூ-சே இன்று வளர்ந்து பெரியவளாகி, எட்டு லி தொலைவிலுள்ள கிங்கோ கிராமத்தில் உள்ள வாலிபனொருவனுக்கு வாழ்க்கைப் பட்டு குடும்ப விளக்கு அணையாமல் பாதுகாத்து வருகிறாள்.

வேங் பாட்டிக்கு இரண்டு கண்களைப்போல நிலமும், ஒரு குலக்கொடியும் இருந்து என்ன பயன்? மகள் மாற்றானின் மனையாட்டியாகிவிட்டாள். நிலமோ நீர் பாய்ச்ச நாதியில்லாமல் பாளம் பாளமாக வெடித்து விட்டது.

தன் மருமகனுக்கு செய்தியனுப்பி, இரண்டு நாட்கள் தன் கிராமத்துக்கு வந்து, தன் நிலத்துக்குப் பரம்படித்து, பண்படுத்தி, விதை தூவி விட்டுப் போகச் சொன்னாள். அவன் மட்டுமென்ன; வேலையில்லாமலா தன் வெள்ளாட்டியுடன் சல்லாபம் செய்து கொண்டிருக்கிறான்? அவனுக்கும் நிலமில்லையா? அவனும் உழுது பயிரிட்டால்தானே ஊன் வளர்க்க முடியும்?

உடனே, வேங் பாட்டி கொஞ்சம் பணியாரங்களைச் சுட்டு அடுக்கிக்கொண்டு மருமகன் மனைக்குச் சென்று அங்கேயே தங்கி விடுவாள். அவன் தன் நிலத்திலே பயிர் நட்டு முடிந்ததும், அவனைக் கையோடு கூட்டிக்கொண்டு கிராமத்துக்குத் திரும்புவாள்.

வேங் பாட்டியின் மருமகன் தன் மாமியாரின் வயலிலே நடவு செய்யும்போது, பக்கத்து நிலங்களிலேபயிரெல்லாம் முழங்கால் அளவுக்கு வளர்ந்திருக்கும். காலங்கெட்ட பயிர்ச் செலவு—என்ன பயன் கொடுக்கும்? ஏதோ அந்த வருஷ சாப்பாட்டுக்குக் கிடைத்தால்போதுமென்று அவளும் ஆண்டவனை வசை பாடாமல்—'மகனொருவனையாவது பெற்றுவிட்டுச் சென்றானா, அந்தப் பாதகன்?' என்று சமாதியில் தூங்கும் தன் கணவனைச் சபிக்காமல் மருமகனை வழியனுப்பி வைப்பாள்!

கழுத்துவரை நிறப்பப்பட்டிருந்த அரிசி, மாதங்கள் ஓடஓட மறைந்து, கடைசியில் கைகள் பானையின் அடித்தளத்தில் உராயும்போது வேங் பாட்டி மூட்டை, முடிச்சுகளுடன் மருமகன் மனை நோக்கி பயணம் தொடங்கி விடுவாள்!

குவளை நீரிலே தூக்கியெறிந்த பளிங்கைப்போல, ஆழத்திலிருக்கும் அவள் விழிகள் தூரத்திலிருக்கும் நட்சத்திரத்தைப் போல இன்றோ நாளையோ அணையப் போவதாக பயமுறுத்திக் கொண்டிருக்கும்! குடல் கழுவுவதற்காக பிறன்மனை புகவேண்டிய புன்மைச்செயல்புரியவேண்டியிருப்பதை நினைத்து அவள் கண்ணீர் வடிப்பாள்—கலக்கத்தின் சிகரத்திலே நின்று, கதியற்றவளாய் அவளை விட்டுச் சென்ற தன் கணவனை எண்ணிப் புலம்புவாள்!

மாமியாரின் வரவு குறித்து எந்த மருமகன் மகிழ்ச்சியின் வசப்படுவான்? 'இது ஏதடா, தொல்லை!'—என்கிற முணகல் கீதம் அவள் வீட்டுக்குள்ளே அடியெடுத்து வைத்ததுமே ஆரம்பமாகிவிடும்!

★

ஆண்டுகள் ஓடின. திடீரென்று வேங் பாட்டியின் வாழ்க்கையிலே ஒரு வேறுபாடு — எப்படியோ அவள் பாதை திரும்பிவிட்டாள்!

முன்னைப்போல அவள் மருமகன் வீட்டிலே 'ஆறு மாத முற்றுகை' போடுவதில்லை.

விண்ணிலிருக்கும் ஆண்டவனையும், மண்ணுள்ளே புதைந்திருக்கும் மணாளனையும் நினைத்து இமைகளை வீங்க வைத்துக் கொள்வதில்லை!

ஆறுபது வயது ஆகிறது, வேங் பாட்டிக்கு! இருந்தும் அவள் ஆறுவயதுச் சிறுமியைப் போல ஆடியோடி விளையாடுகிறாள்!

குழி விழுந்த அவள் கண்கள் கற்பாறையின் இடையே இருக்கும் கண்ணாடிப் பொய்கையில் கதிரவனொளி பட்டதைப்போல பிரகாசிக்கின்றன!

எப்படி வந்தது இந்த மாற்றம்? வேங் பாட்டிக்கு வாலிபம் எப்போது திரும்பியது?

★

சீனத்திலே புரட்சி தோன்றிய போதே வேங் பாட்டியின் வாழ்க்கையிலும் புதுமை மலர்ந்துவிட்டது. மா-சே-துங் ஊதிய சங்கநாதத்திலே அவளுடைய சோககீதம் மறைந்து விட்டது!

சிகப்புச் சீனாவிலே சருகுகள் தளிராகின்றன. கருகிய மொட்டுகள் பரிமள சுகந்தம் எழுப்பும் பாரிஜாதமாகப் பூத்துக் குலுங்குகின்றன!

'தொழில் பரிமாற்றுத் திட்ட'த்தின் கீழே வேங் பாட்டி சுகமாக வாழ்கிறாள்—அவள் நிலம், மருமகனின் துணையில்லாமலேயே விளைவு தருகிறது! அந்தப் புரட்சித் திட்டத்தின்படி வேங் பாட்டி அந்தக் கிராமத்திலுள்ள விவசாயிகளின் குழந்தைகளையெல்லாம், அவர்கள் கழனி சென்று காரியமாற்றும்போது கவனித்துக் கொள்ள வேண்டும். பாட்டியின் இந்த குழந்தைக் கண்காணிப்பு வேலைக்குப் பதிலாக விவசாயிகள் யாவரும் அவளுக்குச் சொந்தமான இரண்டு மௌ நிலத்தையும் உழுது பயிரிட்டு வருகின்றனர்.

கொமிண்டாங் பாம்புகள் நெளிந்து கிடந்த சீனத்துச் சீமை இன்று பாட்டாளிகளின் 'சொர்க்க பூமி'யாக மாறி வருகிறது.

ஆப்பக் கடை வைத்து—இட்லி சுட்டு விற்று—அதில் வரும் ஊதியத்தில் உயிர்வளர்க்க வேண்டிய விதவைகள் அங்கே பொதுவுடமை வீணையின் நரம்புகளை அசைத்து கானம் பாடுகிறார்கள்!

○ தொடர்ச்சி 15-ம் பக்கம்

சென்னையில் மே விழா!

இவ்வாண்டு சென்னை மாவட்ட தி.மு. கழகம் மே தினத்தை மிகச் சிறப்புற கொண்டாடி பெருமை பெறுகிறது. சென்னை வீதிகளிலே தோழர் ராஜேந்திரன் தலைமையில் "உழைப்பவர் கூடினோம்; இனி உயரட்டும் நம் வாழ்வு" என்று ஜீவ இலட்சியம் பாடி, அணிவகுத்துச் சென்ற மிகப் பெரிய ஊர்வலம்—மாலை திருவல்லிக்கேணி கடற்கரையிலே மாற்றார் மனதிலே மருள் பாய்ச்சும் பொதுக்கூட்டம்; அதிலே சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதியும், துணைச் செயலாளர் தோழர் கோ. செங்குட்டுவனும் பொதுச் செயலாளரை வரவேற்று வாழ்த்துரை வழங்குகிறார்கள்—இவைகளையே படம் காட்டுகிறது. (புகைப் படம்: 'ஆர்ட்ஸ் லேண்ட்', சென்னை.)



பாண்டுங்

பாண்டுங்கிலே கூடினர்—சமாதானத்தின் பகைவரைச் சாடினர்—என்றெல்லாம் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன!

பாண்டுங்கிலே,நேரு என்ற இமயத்தின் எவரெஸ்ட் சிகரத்தை உலகம் கண்டு விட்டது என்று மார் தட்டிக் காட்டுகிறார் மாம்பலத்து முனிவர்!

அங்கே ஆசிய—ஆப்பிரிக்க நாடுகளின் மனச்சாட்சி பேசியது —என்று எக்காளம் ஊதுகிறார்—கிருஷ்ணமேனன்!

இருபத்தொன்பதுநாடுகள் கூடினவாம்;ஏகாதிபத்திய இருட்டிலே உழலும் எண்ணற்ற நாடுகளுக்கு இலட்சிய ஒளி வழங்கினவாம்!

ஆணவக்காரர்களுக்கு ஓர் அதிர்வேட்டாய்—ஆசியாவை அலட்சியப் படுத்தியோருக்கு ஓர் அறைகூவலாய்,பாண்டுங்கிலே ஒடுக்கப்பட்டோரின் ஓங்காரக் கூச்சல் ஒயிலாகக் கிளம்பியிருக்கிறது!

மிதித்துத் துவைக்கப்பட்டோர் மிடுக்கு நடை நடந்து காட்டியிருக்கின்றனர்!

சுரண்டலால் ஆண்டியானோர், யாரும் சுரண்ட முடியாத செல்வமாம் சுதந்தரம் தம்மிடம் இருக்கிறது என்பதை உதய சூரியன் போல உலகுக்கு எடுத்து உணர்த்தியுள்ளனர்!

தோழர் சாம்பசிவம்
(தென்னாற்காடு மாவட்ட தி. மு. க. செயலாளர்)

முகமதலி அமெரிக்க நாக்கால் பேசினார்-கொத்தலவாலை டல்லஸ் துரை போல் உதடுகளை அசைத்தார்இருந்தும் பாண்டுங் தொடுத்த பாணம் பாதாள லோகம் வரை பாய்ந்திருக்கிறது என்று நிருபர்கள் கூறுகிறார்கள்!

சூ-என்-லாய் நேரு குழுவினர் வெண்புருவுக்கு சுவையான தீனி கொடுத்து.

மாறன், பி. ஏ. (ஹானர்ஸ்)

அதன் ஸ்பரிசத்திலே லயித்திருந்த போதிலும்கூட, பாண்டுங் நமக்கு தரும் பாடம் ஒன்று இருக்கிறது! அந்த மாநாட்டிலே கலந்து கொண்ட நாடுகளின் விவரம் இந்தப் பட்டியலிலே தரப்பட்டிருக்கிறது!

இந்த நாடுகளிலே பல, ஆதிக்க வெறியர்களின் பலிபீடத்திலே குருதி மழை பொழிந்த பின்னர் தான் விடுதலைக் குழவியை ஈன்றிருக்கின்றன!

மீண்டும் ஒரு முறை அந்தப் பட்டியல் பக்கம் உங்கள் பார்வையைத் திருப்புங்கள்! பாண்டுங்கிலே பிரதிநிதித்வம் ஏற்ற இருபத்தொன்பது நாடுகளிலே பதினைந்து நாடுகள் நாம் கேட்கும் திராவிட நாட்டை விட பரப்பளவிலே சிறியவை! இந்தியாவைத் தவிர்த்து இரண்டே நாடுகள்தான் நம்மைவிட ஜனத்தொகை அதிகம் உடையவை!

நாடு	ஜனத்தொகை	சதுர மைல்
லெபனான்	14,00,000	4,000
லைபீரியா.கோல்ட்கோஸ்ட்	57,11,000	1,35,000
லிபியா	15,00,000	6,79,000
நேபாளம்	70,00,000	54,000
பாகிஸ்தான்	7,58,00,000	3,64,000
பிலிப்பின்ஸ்	2,10,00,000	1,15,000
ஸாவூதி அரேபியா	70,00.000	8,70,000
ஸூடான்	88,00,000	9,67,000
ஸிரியா	36,00,000	72,000
தாய்லந்து	1,99,00,000	2,00,000
துருக்கி	2,24,00,000	2,96,000
வட வியட்நாம்	1,20,00,000	77,000
தென் வியட்நாம்	1,00,00,000	50,000
யெமன்	45,00,000	75 000
ஆப்கனிஸ்தான்	1,20,00,000	2,50,000
பர்மா	1,92,00,000	2,61,000
கம்போடியா	38,00,000	88,000
இலங்கை	83,00,000	25,000
சீனா	46,34,00,000	37,60,000
எகிப்து	2,22,00,000	3,86,000
எதியோபியா	1,50,00,000	3,50,000
இந்தியா	37,20,00,000	12,21,000
இந்தோனேசியா	7,82,00,000	9,05,000
இரான்	2,05,00,000	6,28,000
இராக்	49,00,000	1,71,000
ஜப்பான்	8,82,00,000	1,42,000
ஜோர்டன்	14,00,000	37,000
லாவோஸ்	13,00,000	69,000

ஆசிய—ஆப்பிரிக்க நாடுகள் தனக்கென ஒரு கொடி கொண்டு, தனித்து வாழ வழி கண்டு, ஏகாதிபத்திய தருக்கர்களின் தலைகொய்ய அவையெல்லாம் பாண்டுங்கிலே உறுதி ஏற்றிருக்கின்றன!

இதிலே பல நாடுகளை ஏகாதிபத்தியத்தின் நிழல் மூடியிருக்கலாம். சிலவற்றிலே குடியாட்சிக்குப் பதில் மன்னராட்சி நடந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் அவை ஒரு மாநாட்டிலே கலந்து கொள்கிற அளவுக்கு 'தனித் தன்மை' பெற்றிருக்கின்றன என்பதை யாரும் மறுக்கமுடியாது!

பட்டியல் தரும் பாடம் கேட்டீர்கள்—இனி, வடநாட்டுக் கொட்டடியிலே கட்டப்பட்டிருக்கும் உங்கள் அன்னையைப் பாருங்கள்!

நாலே ஆயிரம் மைல் பரப்புள்ள லெபனான் சீரும், சிறப்புடனும் வாழ்கிறது! ஆசிய மக்களது அணியிலே திரண்டிருக்கிறது! சுமார் ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் மைல் பரப்பளவு கொண்ட திராவிடம்வடவரின் பாதங்களுக்கடியில் துவளுகிறது! வெய்யிலில் புழுவாகத் துடிக்கிறது!

13 லட்சம்" பேர் வசிக்கும் லாவோஸ்—14 லட்சம் மக்கட் தொகை உடைய ஜோர்டன்—அதே தொகையுடைய லெபனான்—அதை விட ஒரு லட்சம் அதிகக் குடிகள் கொண்ட லிபியா—இவையெல்லாம் பாண்டுங்கிலே சமாதானப் பேரிகை தட்டியிருக்கின்றன; ஓடிக் கொண்டிருக்கும் ஏகாதிபத்தியக் குதிரையின் 'லகானை'ப் பிடித்து நிறுத்தியிருக்கின்றன!

13 லட்சம் லாவோஸ் மக்கள் இன்று சுதந்தரக் குடிகள்—14 லட்சம் ஜோர்டன் வாசிகள்; லெபனான் குடிகள்—இன்று விடுதலைக் குழந்தையின் பாகு நிகர்த்த மழலையிலே தங்கள் காதுகளை நனைத்திருக்கின்றனர்!

சுமார் 600 லட்சம் திராவிட மக்கள் இன்று அனாதைகளாய், ஆதரவற்றோராய், வட்டிலை நிரப்ப வடநாட்டு முதலைகள் எப்போது முன் வரும் என்று வருந்தி நிற்கும் வரண்ட தலையராய் வாழ்கின்றனர்!

எகிப்தியரைப் போல நாமும் எழுச்சியுகம் காண வேண்டாமா? தாய்லாந்து மக்களைப் போல தாவிப் பாய்ந்து தறுதலைகளின் தலை நறுக்குவது எப்போது? துருக்கியில் கேட்கும் துந்துபி முழக்கம் திராவிடத் தரணியில் எப்போது கேட்கப் போகிறது? சீனத்திலே தோன்றிய விடுதலை ஜோதி இங்கேன் தோன்றவில்லை? சுதந்தரச் சுடர்முகம் காட்டும் சூடான்; சுரண்டல்காரர்களை சுக்கு நூறுக்கிய ஈரான்; ஏமாற்றுக் காரர்களை இருட்டறையில் பூட்டி ஏற்றம் கொண்டிருக்கும் ஏமென்—இந்த வரிசையிலே நமதருமைத் திருவிடம் சேர்வது எப்போது?

குறுகிப்போயிருக்கும் நம் மனச்சாட்சியை இந்தக் கேள்விகள் கிள்ளி உணர்ச்சி வெறியேற்றட்டும்!

சிதறி நிற்கும் திராவிடரின் உள்ளங்களை இன உணர்ச்சிப் பாசத்தால் ஒன்று கூட்டட்டும்!

அடுத்த 'பாண்டுங்' நடக்கும் போது அங்கே நாமும் பண் பாட வேண்டும்—தியாகப் புண்களைத் தடவிய படியே!

★

மகாபாரதம்
(தொடர் சித்திரம்)
அடுத்த இதழில்

3. காதல் கட்டம்

கிரேக்க புராணங்களிலே கண்ணுக்குப் புலப்படாத கடவுளர் உலகத்தை மட்டுமல்ல; அவைகளிலே, கண்ணுக்குத் தெரியும் கதாபாத்திரங்களையும், கலை மெருகு சூட்டிய கற்பனைக் காட்சிகளையும் ஆங்காங்கே பண்டிதமணிகள் திணித்து வைத்திருக்கின்றனர். கடவுளர்களின் வீரத்தையும், தேவர் கோமகனின் விவேகத்தையும் மட்டும் கிறுக்கி வைத்தால், அது புராணம் கேட்பவர்களுக்கு சுவைதருமா? எனவேதான் புராணத்தை பாமரர்களிடையே பிரபலமாக்க காமச்சுவை தேவைப்பட்டது. இந்த நாட்டில் இருப்பது போலவே கிரேக்கத்திலும் காமத்துப் பாலை அளவோடு ஊட்டிய புலவர்களும் இருந்திருக்கிருர்கள் — காமச் சுவைக்கு கடல் தோண்டிய கம்பர்களும் இருந்திருக்கிருர்கள்!

அத்தகைய பாவாணர் கூட்டத்திலே அபுலீயஸ் என்பவன் நினைப்பதை நாசூக்காகச் சொல்வதிலே பெயர் பெற்றவன்—கி. பி. இரண்டாம் நூற்ருண்டிலே வாழ்ந்தவன்! அவன் கவிதை நயம் கொப்பளித்து ஓடும் கதையொன்றைச் சொல்கிருன். கிரேக்க நாட்டு கம்பர்களைச் சந்திப்பதற்கு முன்னர், அபுலீயசை பேச வைப்போம்.

★

ஈரேழு, பதினலு லோகங்களிலும் பார்க்க முடியாத பாவை—வனப்பும், வாலிபமும் அழகாகப் பொருந்தி நிற்கும் கோவை—நினைத்தாலே நெஞ்சு நெகிழ்விக்கும் தோற்றம்! காளையர் கூட்டம் அவளைக் கண்டுவிட்டால் சாவே வரினும் அவளை மஞ்சத்தில் கிடத்தி கொஞ்சிடத் துடிக்கும்—அவளது பாத கமலங்களில் சிரத்தைத் தனித்து வாழ்நாளெல்லாம் துதித்திட எண்ணும்! அவள் பெயர்தான் சைச்!

இவ்வளவும் இருந்த போதும், அவளிடம் ஒரே ஒரு குறை இருந்தது. எதற்கும் ஒரு அளவு இருக்க வேண்டுமே! அந்த மங்கை நல்லாளிடம் அழகு குடியேறியபோது, அது அளவைப் பற்றிக் கவலைப் படவில்லை! 'பேரழகின் இருப்பிடம்' என்று வர்ணிக்கிருர்களே, அது வார்த்தைக்கு வார்த்தை பொருந்தும்படியாக அண்டத்திலுள்ள முழு அழகும், உருண்டு. திரண்டு அவளிடத்திலே புகுந்து விட்டது!

அழகான பெண்ணை ஆடவர்கள் காணுவதும், கண்ட மாத்திரத்திலே காதல் கொள்ளுவதுந்தானே உலக நியதி!

ஆனல் இவளோ அழகுத் தேவதையாக அல்லவா காட்சி தருகிருள்! இவளை யார் மணக்க முன் வருவர்?

சைச்சின் பருவத்து எழிலையும், புருவத்து அசைவுகளிலே புன்னகை புரியும் பேரிளமையையும் கேள்விப்படுபவர்கள், "மணந்தாலும் அந்த மங்கையைத்தான் மணப்பேன்"—என்ற நெஞ்சு உறுதியோடுதான் வருவர்--அவள் உருவம் காண்பர்—கண்ட பின்னரோ நெஞ்சு நெகிழ்வர்--திரும்பி விடுவர்—

இதைப்போல திரும்பியவர்கள் ஒருவரா? இருவரா? — ஓராயிரம் இருக்கும்!

சைச்சின் தந்தை சஞ்சலமே உருக்கொண்டார். அவளோடு கூடப்பிறந்த இரு சகோதரிகளும், காதல் மணம் செய்துகொண்டு, களிப்புக் கடலிலே நீராடிக் கொண்டிருக்கின்றனர். ஆனல் அவளைவிட அழகான சைச்சை ஏன் ஒருவரும் தீண்டுவதில்லை?

அந்த வினு எல்லோர் மனதையும் குடைய ஆரம்பித்தது. சைச்சும் கண்களைக் குளமாக்கிக் கொண்டாள்; உள்ளமும் ரணமாகிக் கொண்டிருந்தது!

இதற்கெல்லாம் அபுலீயஸ் ஒரு சில வரிகளிலேயே விளக்கம் தந்து விடுகிருன்.

அழகு குலுங்கும் அந்தச் சோலையிலே நடைபோட விரும்புபவர்கள்—'ஆகா! இந்தச் சோலையிலே படுவதற்கு தங்கத்தாலான பாதங்கள் அல்லவா வேண்டும்? பாசி படிந்த நம் பாதங்கள் இதில் படுவதற்கு தகுதி பெற்றவைதானு? — என்கிற சந்தேகத்தால் தூண்டப்பட்டு துயரத்தில் ஆழ்ந்தனர்! "இவளோ அழகின் சிகரம்! அந்தஸ்தின் இமயம்! நாமோ எறும்புக் குன்றம்! எப்படிப் பொருந்தும் நம் சேர்க்கை!"—என்று பெருமூச்சு விட்டு, துக்கத்தின் வசப்பட்டனர்!

பூஞரம் பூட்டி, முத்தத்தால் அவள் வாயைப் பொத்த நினைத்தவரெல்லாம், அவளைக் கண்டதும், பொங்கி வழியும் அழகில் மயங்கி, அவள் பெண்ணென்ற நினைப்பையே மறந்து, தேவமகள் என்று கருதி பூஜிக்க ஆரம்பித்து விட்டனர்!

எட்டு திக்கிலிருந்தும் கொட்டு முழக்கோடு மக்கள் வெள்ளம் திரண்டு வந்து அவளைத் தரிசித்துச் சென்றதாம். "இவள்தான் அழகின் தெய்வமாக இருக்கத் தகுதிபெற்றவள்!" —என்று கூக்குரலிட ஆரம்பித்தது, கொஞ்சம் வெறி பிடித்த வாலிபப் பட்டாளம்!

சைச்சின் அழகு. வெளியில் பிரச்சாரமானதும், அழகு தேவதையாம் வீனஸின் கோவிலுக்கு வெளவால்கள் கூடச் செல்வதில்லை! பக்தர்கள் கூட்டமெல்லாம் சைச்சை பார்க்க திரும்பி விட்டது!

தனக்குப் போட்டிக்காரி ஒருவள் முளைத்திருப்பது கேட்டு வீனஸின் கண்கள் கனல் கக்கின. உடன் தனது ஆசை மகனும் கியூப்பிட்டை அழைத்து, சைச்சிற்கும், பரம விகாரமான நரகலோகத்து அவலட்சண அரசனுக்கும் காதல் மூட்டிவிட்டு, அவளை உடன் பூலோகத்திலிருந்து அப்புறப்படுத்தும்படியாக அவசர உத்தரவொன்றைப் பிறப்பித்தாள்.

கியூப்பிட் யார் தெரியுமா? அவன்தான் கிரேக்க புராணத்து மன்மதன்! காதல் நோயின் விளைநிலம்! கருத்தொருமித்தவரை மண மேடையிலே ஒன்றுசேர்த்து வாழ்த்துரைகள் வழங்கும் தேவதூதன்!

அன்னையின் ஆணையை தலைமேற்தாங்கி, கியூப்பிட் சைச்சை சந்திக்கச் சென்ருன்!

கியூப்பிட் என்னும் அந்தக் கிரேக்கநாட்டு மாரனின் கணைபட்டு, பற்பல மாந்தரின் காதல் அணைகளெல்லாம் தூள்தூளாக உடைந்திருக்கின்றன!

அப்படி உடைபட்ட அந்த உணர்ச்சி வெள்ளத்திலே சிக்கிக்கொண்டு, வேந்தனின் மகளும், மர்டோட்டும் கந்தனின் மகளும், "காதலுக்கேது பேதம்?" என்ற கானம் எழுப்பியிருக்கின்றனர்.

ஆனல், சைச்சைப் பார்த்த மாத்திரத்தில், அவன் அம்புறாத்தூணியிலிருந்து கணையொன்று துள்ளியெழுந்து, எண்ணற்றோர் நெஞ்சத்தைப் புண்ணாக்கிப் போட்ட அவன் உள்ளத்தையே கௌவிக்கொண்டது! ஆமாம்; காதலென்னும் பலிபீடத்தில் சாய்ந்து விட்டான் அந்த சல்லாப சுந்தரன்! மன்மதனையே மயக்கி விட்டது, சைச்சின் பேரழகு!

"தேன் மொழியே—என் கால்கள் முடமானாலும், வேல் எறியும் உன் விழிச் சுவட்டில் ஊர்ந்து வருவேன், என் ஊர்வசி!'—என்று சபதம் போட்டு கியூப்பிட் அவளை வட்டமிட ஆரம்பித்தான்.

இந்த இடை நேரத்தில், சைச்சின் தந்தையார், தன்னுடைய மகளை அழைத்துக்கொண்டு கன்னிப் பெண்ணுக்கு கணவனெருவனைத் தேடித் தரும்படி அப்போலோ ஆண்டவனை வேண்டிக் கொண்டார். அதன்படியே அப்போலோ பிரசன்னமாகி சைச்சை குறிப்பிட்ட மலை அடிவாரத்தில் தன்னந் தனியளாக விட்டு வரும்படி அசரீரி மொழிந்து விட்டு மறைந்து விட்டார்.

அதன்படியே குறிப்பிட்ட நாளும் வந்தது. ஆடை அணிகலன், ஆசைக்கு வாசமலர்—இவைகளையெல்லாம் மகளுடைய மனம் மகிழும் வகையில் வாங்கிக் கொடுத்த தந்தையார், சைச்சுக்கு அன்றைய தினம் துக்கத்தைக் காட்டும் கறுப்பு உடையை சூட்டினர். சுடுகாட்டுக்கு தன் சோதரியை அனுப்பி வைப்பது போல, தமக்கையர் இருவரும், அழுது புலம்பிக்கொண்டு அவளை புக்ககம் அனுப்பினர்.

அப்போலோ சொல்லிய அந்த நேரமும் வந்தது. மலைஅடிவாரத்தில் தன்னந்தனியளாக நின்று கொண்டிருந்த அந்தப் பேதையை செனபர் என்னும் தென்றல் காற்று அணைத்தபடி தூக்கிச் சென்றது. சைச்

★ தொடர்ச்சி 6-ம் பக்கம்

நெடுஞ்செழியன்

(கவிஞர் வாணிதாசன்)

மலைபடு பொருளும் வயல்வெளி நெல்லும்
சுவைமிகு இலக்கிய நூலும்
அலைபடு பொருளும் அறிவியல் விளைவும்
உலகெலாம் அளித்தநம் நாடு
வலைபடு மான்போல் மற்றவர் ஏய்க்க
வளமெலாம் இழந்தது கண்டீர்!
நிலைபடு பண்பை நிறுத்தினர் அண்ணு!
அவர்வழி செழியனுர் நின்ருர்!

தகுதியும் நல்ல தமிழ்ச்சுவை வளமும்
வாய்த்தவர் இரா. நெடுஞ் செழியன்!
மிகுசிறப் பொடு பொதுச் செய லாளர்
வெற்றியைப் பெற்றனர் வாழ்க!
புகுந்திடு துன்பம் ஆரியக் கலப்பு
புறமுது கிட்டினி ஓடும்!
வெகுவிரை வாகத் திராவிட நாட்டை
மீட்டுநாம் வாழ்ந்திடு வோமே!

பண்டையர் வீரம் தமிழரின் தோற்றம்
பகுத்தறி வாளரின் தூய்மை
கொண்டவர் தோழர் இரா. நெடுஞ் செழியன்
பொதுச்செய லாளராய்க் கொண்டோம்
எண்டிசை யெங்கும் இனித்தமிழ் முழக்கம்!
இங்குள உடைமைகற் பொதுவாம்!
அண்டைய நாட்டு மக்களைப் போல்நாம்
தனியர சடைந்திடு வோமே!

திரும்பிப்பார்!

சிவப்பு முள்ளங்கி!

17-ம் நூற்றுண்டில் பிரஞ்சு நாட்டை ஆண்ட பேரரசன் பதினுலாவது லூயியைப்பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். 72 ஆண்டுகள் மணிமுடி தரித்து பிரஞ்சுமண்ணை ஆண்ட அவன், மற்ற மன்னர்களுக்கு வழிகாட்டியாக இருந்தான். 'அவனுடைய ராஜ தர்பார் சூரிய மண்டலமாகவும், அவன் சூரியனுகவும். அவனுடைய ராஜ தர்பாரில் உள்ளவர் அவனைச் சுற்றிவரும் கிரகங்கள்' என்றெல்லாம் வர்ணிக்கப்பட்ட லூயியை, பிரபல ஆங்கில ஆசிரியனுகிய **கார்லைல்** எப்படி சித்தரிக்கிருர் என்பதைச் சற்று பாருங்கள்.

“லூயி, லூயி என்று கொண்டாடுகிறீர்களே, அந்த லூயியின் அரச உடைடைக் களைந்துவிட்டுப் பாருங்கள். அங்கே, விசித்திரமான மண்டையோடு கூடிய கால் முளைத்த ஒரு சிவப்பு முள்ளங்கியைத் தவிர வேறு எதையும் காணமாட்டீர்கள்”

✶

சார்லஸ் சரித்திரம்!

'மக்களை ஆளுவதற்கு மகேசுவரன் உரிமை அளித்துள்ளான்; ஆண்டவனின் பிரதிநிதியாகிய நான் உங்களை ஆளுகிறேன்' என்று கூறிய இங்கிலாந்தை ஆண்ட முதலாவது **சார்லஸி**ன் சோகக் கதையைக் கேளுங்கள்.

“அரசன் எதேச்சாதிகாரமாக ஆளக்கூடாது — சட்டத்திற்கு விரோதமாக வரி விதிக்கக்கூடாது — விசாரணையின்றி மக்களை சிறையிலே அடைக்கக்கூடாது—அவசரச் சட்டங்கள் பிறப்பித்து மக்களைக் காவலில் வைக்கக்கூடாது” என்ற உரிமை விண்ணப்பத்தை பார்லிமெண்டு மன்னனிடம் சமர்ப்பித்தது. “இவர்கள் யார் எனக்குக் கட்டளையிட? நான் மணிமுடி தரித்த மன்னன்—என் மனம்போல் நான் நடப்பேன்” என்று கூறி, பார்லிமெண்டை கலைத்துவிட்டான். மக்களின் பிரதிநிதியாக கிராம்வெல் போர் முரசு கொட்டினுன்... சார்லஸ் கைது செய்யப்பட்டான்! கொடுங்கோலன், கொலைகாரன், தேசத் துரோகி, தேச விரோதி என்று குற்றம் சாட்டி 1649-ம் ஆண்டில், லண்டனிலுள்ள 'ஒயிட் ஹாலி'ல் சார்லசின் தலையை வெட்டி எறிந்தார்கள். 'மக்கள் குரலே, மகேஸ்வரன் குரல்' என்பதை மறந்து, அதிகாரம் தன் கையில் இருக்கும் காரணத்தால், நாம் எதையும் செய்வோம் என்று எண்ணி, மக்களின் குரலுக்கு செவிமடுக்காத சார்லசின் சோகக் கதையை, அதிகாரத்தில் அமர்ந்திருப்போர் சற்று திரும்பிப் பார்க்க வேண்டும். அதிகாரம் நம் கையில்—பட்டாளம் நம் பக்கம்—மக்கள்—மக்களா அவர்கள்; வெறும் ஜனக்கூட்டம்-என்றெண்ணும் ஆளவந்தார்கள் சார்லசின் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் புரிந்துகொள்வார்கள்; 'மக்கள் சக்திக்குமுன் எதுவும் நில்லாது' என்பதை!

✶

ஹ்யூகோ பாடம்!

ஏழைகளின் துயரையும், பாட்டாளிகளின் அவல வாழ்வையும் எடுத்துக் காட்டி, முடிமன்னர்களின் கோலாகல வாழ்வைச் சாடி—முடியாட்சி ஒழிய வேண்டும்—மக்களாட்சி மலர வேண்டும் என்றெல்லாம் எழிற் காவியம் தீட்டிய **விக்டர் ஹ்யூகோ** தீவிர முடியரசுவாதியாகவும், யதேச்சாதிகாரத்தில் நம்பிக்கை உடையவராகவும், வாழ்க்கையைத் தொடங்கினுர். பின்னர் படிப் படியாக மாறிவந்து குடியரசுவாதியானுர்.

காலம் கனியக் கனிய அவரின் கொள்கையும் மாறியது. ஆனுல் இங்கோ ஆரம்பத்தில் குடியரசு வாதிகளாக இருந்தவர்களெல்லாம், வயது ஏற ஏற முடியரசு வாதிகளாக மாறும் விந்தையைக் காண்கிறேம். விடுதலை கீதம் இசைத்தவர்களெல்லாம், வியாசர் விருந்தையும், சக்ரவர்த்தித் திருமகனையும் தீட்டுவதிலே காலம் கழிக்கின்றனர்!

இன்னும் சொல்லப் போனுல், 'ஆண்டவனின் திருவிழாவுக்கு வருக; வருக!' என அழைத்து, ஆயிரக் கணக்கான பக்தர்களைப் பயங்கரச் சாவுக்குப் பலி கொடுக்கும் 'கும்ப மேளா' போன்ற கொடிய திருவிழாவுக்கும், உலக சரித்திரத்திலே நல்லிடம் தேடவேண்டிய நாடாள்வோரே காரணமாகினுர்கள்! சிந்தை கலக்கும் இச் சீர்கெட்ட காட்சிகளை இந்நாட்டில்தான் காண முடியும்! விந்தை! விந்தை!

★

கிரேக்க புராணம்...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

மயக்கமுற்ருள். கண் விழித்து பார்த்தபோது தான் ஒரு பளிங்கு மண்டபத்தில் இருப்பதை உணர்ந்தாள்.

பத்தரை மாற்று தங்கத்தாலான தூண்கள்! வெள்ளியினுலான சுவர்கள்! வைரமணிகள் பதித்திருக்கும் வழவழப்பான தரைகள்! இவைகளையெல்லாம் பார்த்தவுடன் சைச் சிலையாகி விட்டாள்.

திடீரென சில ஒலி அலைகள்—உள்ளந் தழுவும் இசை அவளை மெய் மறக்கச் செய்தது. “நாங்கள் யாவரும் உன் அடிமைகள்—இதுதான் உன் கணவன் வீடு”—என்று சிலர் அவள் காதோரத்தில் 'குசுகுசு'வென்று பேசுவது போல் இருந்தது.

இரவும் வந்தது. விதவிதமான மலர்கள் சொரிந்திருந்த பஞ்சணையிலே சைச் படுத்திருந்தாள். 'வரப்போகிற கணவன் வீனஸ் குறிப்பிட்டதைப்போல பாம்பாக இருப்பானு? பொல்லாத பூதமாக வந்து என்னைத் துன்புறுத்துவானு?”-இப்படியெல்லாம் நினைத்து அவள் நடுங்கிக் கொண்டிருந்தாள்.

திடீரென்று அவள் உதடுகளிலே மழ மழவென்ற உணர்ச்சி ஊடுருவியது: “கலங்காதே கணனே! நான்தான் உன் கணவன். நீயும் தேவலோகத்து மங்கையாக மாறும் வரையில் நீ என்னைப் பார்க்க முடியாது”—என்று அன்பு வழியும் தொனியிலே அவள் கணவன் பேசினுன். மாறி மாறி அவள் கன்னங்களிலே முத்தங்களைப் பொழிந்தான்.

மறுநாள் காலை—என்றைக்கும் இல்லாமல் அன்று அவள் கணவன் பகலிலே பேசினுன். “கண்ணே, சைச்! இன்று உன் தமக்கையர் இருவரும் நீ செத்து விட்டதாக நினைத்து உன்னை விட்டுச் சென்ற அந்த மலையடிவாரத்தில் அழுது புலம்பவருகின்றனர். அவர்களை நீ ஏறெடுத்தும் பார்க்கக் கூடாது!” என்று கடுமையான உத்தரவு போட்டான்.

நினைவு வந்த நாள் முதல் நேசமுடன் வளர்ந்த அந்த சோதரியரை சைச் எப்படி அவ்வளவு விரைவில் மறக்க முடியும்? அன்று மட்டும் எப்படியும் அவர்களைப் பார்த்துவிட வேண்டுமென்று அவள் கண்ணீர்த் தடாகத்தின் கரைகளை உடைத்து விட்டு ஒரு வெள்ளப் பெருக்கையே உண்டாக்கி விட்டாள்.

அவள் கணவனது மனமும் இளகிவிட்டது. அதன்படியே தன் மனைவியின் முதல் கோரிக்கையை நிறைவேற்றினுன்.

பின் சிறிது நேரத்திற்கெல்லாம் செனபர் என்கிற தென்றல் அவர்களைத் தூக்கிவந்தது. ஆவல் ததும்ப சைச் தன் சகோதரிகள் இருவருக்கும் தங்கள் மாளிகையைச் சுற்றிக் காண்பித்தாள். வைரமணித் தூண்களைக் காட்டினுள்! மாணிக்கங்கள் பதித்த மஞ்சத்தைக் காட்டினுள்! தன் பாதங்கள் பட்டு மெருகேறும் தங்கத்தாலான தரையைக் காட்டினுள்!—இவைகளையெல்லாம் பார்த்தபோது சகோதரியர் இருவரையும் பொருமைத் தீ கௌவ ஆரம்பித்தது.

நவரத்னங்களெல்லாம் இந்த நாரிமணியின் காலடியிலே குவிந்து கிடக்கின்றனவே!—என்று எண்ணி பெருமூச்சு விடத் துவங்கினர். அந்தப் பெருமூச்சு நாளடைவில் சைச்சின் வாழ்வை தூள் தூளாக்கும் புயற்காற்ருக உருவெடுத்தது!

முன்னமேயே உருவேற்றிக் கொண்ட சதித்திட்டத்துடன் தமக்கையர் இருவரும் மறு நாள் காலை மலையடிவாரத்தில் மறுபடியும் ஒப்பாரி வைத்தனர்! கணவனின் மடியிலே ஒய்யாரமாகப் படுத்திருக்கும் சைச்சின் காதுகளை அந்த புலம்பலோசை ஊடுருவிப் பாய்ந்தது. உடன் அவள் கணவன் விழித்துக் கொண்டான். “என் ஆசைக்கண்ணுட்டி! தமக்கையர் உருவிலே துரோகம் உன் மாளிகையின் கதவைத் தட்டுகிறது! வைரக் கட்டி போன்ற உன் வாழ்வை பொடிப்பொடியாக்க உன் சகோதரிகள் வந்திருக்கின்றனர்! எக்காரணத்தைக் கொண்டும் நீ என் சுய ரூபத்தைப்பார்க்கமுயலாதே! பாசம் நிறைந்த நம் கூட்டுறவைக் கெடுத்து விடாதே!”-இந்த எச்சரிக்கையுடன் அவன்மறைந்து விட்டான்!

✶

வழக்கம்போல அவள் தமக்கையர் வந்தனர். ஆனுல், வழக்கத்துக்கு மாருக அவளைக் கண்டதும் அவர்கள் முன்னிலும் வேகமாக ஒப்பாரி வைத்தனர். “ஐயோ! என் தங்கையே! பொல்லாத பேய்க்கல்லவா நீ வாழ்க்கைப்பட்டிருக்கிருய்? நீ எப்படியடி இந்த சுடுகாட்டில் தனியாக வாழப்போகிருய்!”--இப்படியெல்லாம் அவர்கள் பிலாக்கணம் படித்தனர்!

இந்த முழக்கத்தைக் கேட்டதும் சைச்சுக்கும் தன் கணவனைப் பற்றிய சந்தேகம் வேரூன்றியது. “பேயாக இருப்பதால்தான் தன் கணவன் தன்னைப் பார்க்கக் கூடாது என்று உத்திரவிட்டிருக்கிருனே?” என்கிற வினுக்குறி அவள் வாழ்வையே வளைத்து விட்டது.

சைச்சுக்கு ஏற்பட்ட இந்த சந்தேகத்தை அவள் சகோதரிகள் இன்னும் பலமாக்கினர். பின் அவர்கள் மூவரும் சேர்ந்து ஒரு திட்டம் தயாரித்தனர். அதன்படி இரவு அவள் கணவன் அவளருகில் படுத்துறங்கும்போது, சைச் ஒரு விளக்குடனும், தீட்டிய கூர் வாளுடனும் அவனருகே செல்ல வேண்டுமெனவும், அவள் கணவன் விழிப்பதற்குள் அவனைக் குத்திக் கொன்று விட்டுத் திரும்பி விட வேண்டுமெனவும் தீர்மானம் செய்தனர்.

இரவு வந்தது. சுவரிலே உள்ள வெள்ளியையும், தங்கத்தையும், தரையிலேபதித்திருக்கும் நவரத்ன மணிகளையும் அவள் சகோதரிகள் சுரண்டி எடுத்து மூட்டைக் கட்டிக் கொண்டார்கள். அவர்கள் தீர்மானப்படியே விளக்கைக் கொளுத்திக் கொண்டு, உருவிய வாளுடன் அவனருகில் சைச் சென்ருள்!

ஆ! என்ன விநோதம்! சுந்தர வடிவம் ஒன்று அவளருகிலே படுத்திருந்தது. அவன் மேனியின் ஒளிபட்டு, அவள் கையிலே வைத்திருந்த விளக்கின் ஒளி இருந்த இடமே தெரியாமல் மறைந்து விட்டது! அதற்கு மேலும் அவளால் அங்கு நிற்க முடியவில்லை. “ஆ! அத்தான்! உங்களுக்குத் துரோகம் செய்துவிட்டேனே!” என்று சொல்லியபடியே அவன் மீது சாய்ந்தாள். அதற்குள்ளாக அவள் வைத்திருந்த விளக்கிலிருந்து சூடான எண்ணை அவன் மீதுதெறித்து அவன் திரேகத்தைப்

★ தொடர்ச்சி 14-ம்பக்கம்



பணம் பேசுகிறது. இந்தப் பரந்த உலகில் ஒரு ரூபாயின் சொற்பொழிவை யாரும் கேட்காமலே போய்விடலாம்! ஆனாலும் என் சுய புராணத்தைக் கூறத்தான் போகிறேன். என் அண்ணன்—அப்பா—தாத்தா நிரம்பியுள்ள இந்த நீள் வையகத்தில், இந்தப் 'பொடிசின்' புராணத்தில் சுவையான பகுதி இல்லாமலிருக்கலாம். ஆனாலும் 'சிறு துரும்பும் பல்குத்த உதவுமே' என்பதுபோல . உருண்டோடும் என் வாழ்க்கையிலும் சில நல்ல அம்சங்கள் இருக்கும் என்று நினைத்துக் கேளுங்கள்!

நான் 1949-ம் ஆண்டு பிறந்தேன். இந்தப் பரந்த உபகண்டத்தை அடக்கி ஆண்டு சந்தைக் காடாக்கிய ஆங்கிலேயர்கள் இந்நாட்டின் சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்துவிட்டு, மூட்டை முடிச்சுகளுடன் கப்பல் ஏறினார்களே, அதற்கு இரண்டாண்டுகளுக்குப் பின். என் உடலின் ஒரு பக்கத்திலே அசோக சக்கரத்தையும், மறுபுறத்திலே என் 'ஜனன' வருடத்தையும் வரைந்திருந்தனர். 'போர் இனிக்கூடாது-பாரில் சமாதானத்தை பரப்புவேன்' என்று வீர முழக்கமிட்ட தார்வேந்தன் புத்தனின் புனிதக் கொள்கைகளை இதயத்திலே தாங்கி, ரத்தம்-ரத்தமென பித்து பிடித்தலையும், யுத்த வெறியர்களுக்கு நல் பாடம் புகட்டிய உத்தமன் அசோகனின் சின்னத்தைத்தான் என் உடல் தாங்கிக்கொண்டிருந்தது. ஆனால் மத வெறியால் மாண்ட குடும்பங்கள் எத்தனை எத்தனை? ஓடிய இரத்த வெள்ளம் எவ்வளவு—எவ்வளவு? சாந்தசொரூபி—உலக உத்தமன்—காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டாரே, அதே ஆண்டுதான் நான் பிறந்தேன்.

பல்லாயிரம் அண்ணன், தம்பிமார்களுடன் நான் கஜானாவிலே சிறை வைக்கப்பட்டிருந்தேன்—'விடுதலையே கிடைக்காதா? வெளி உலகத்தைக் காணமாட்டேனா?' என்று ஏங்கியது என் இளம் உள்ளம். தினம் தினம் வெளியே போகும் என் உறவினர்களைக் கண்டு கண்டு என் கண்கள் கலங்கி கண்ணீர் வடிக்கும்... ஒரு நாள் என் வாழ்வின் திருநாள் — எனக்கு விடுதலை கிடைத்தது. ஒரு சினிமா கம்பெனியின் முதலாளிக்கு உரிமையாக்கப்பட்டேன் நான். சீமானின் சில்க் சட்டையிலே நான் தொத்திக்கொண்டதும் என் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது. என் விடுதலை தாகம், வேதனை கீதமாக மாறுமென்று நான் நினைக்கவே இல்லை; கனவும் காணவில்லை.

என்னைப் போன்றவர்களை மிகவும் அலட்சியமாகவும்-அகௌரமாகவும் நடத்துபவர்கள் இந்த சினிமா கம்பெனிக்காரர்கள்தான்! என்னை-ஏன்-என் இனத்தையே அவர்கள் மதிப்பதில்லை. சாதாரண ஒரு 'எக்ஸ்டிரா'வுக்குக் கிடைக்கும் கௌரவம்கூட எங்களுக்கு கிடைப்பதில்லை. என் முதலாளி ஒரு ஷோக் மைனர். அவருக்கு பொழுது போகவில்லை. ஸ்டுடியோவிலே நடைபெறும் 'ஷூட்டிங்'கைக் கண்டு, கண்டு அவரின் கண்கள் பூத்துவிட்டனவாம். சரசவல்லிகளின் சதிர் கச்சேரியும் கசந்து விட்டதாம். கோகிலவாணியின் இசையும்வேம்பாகி விட்டதாம்-ஆகவே போனை எடுத்தார். நண்பர்களை அழைத்தார்...காரிலே பறந்து வந்தனர் அவர்கள்...மாடி முற்றத்திலே, இரத்தின கம்பளத்திலே, வட்டத் தாமரை இதழ்போல அமர்ந்தனர் சீட்டு விளையாட. என் முதலாளி கொண்டேயிருந்தார். அழுது கொண்டே போனார்கள் என் அண்ணன்மார்கள். ஆனால் என் முதலாளியின் முகத்திலே புன்முறுவல் தவழ்ந்ததே தவிர, சோக மேகம் படரவே இல்லை...பணத்தை இழப்பதிலே என்ன மகிழ்ச்சி அவருக்கு? காலத்தை கழிக்க காசைப் பணயம் வைக்கின்றனர்! 'விந்தை மனிதரடி' என்ற கீதம் காற்றினிலே மிதந்து வந்தது. நான் ஒருவன்தான் தப்பித்தேன். கூடியுள்ள பறவைகள் சிறு சப்தத்தைக் கேட்டதும், 'விருட்' டென்று பறப்பதுபோல, இவர்களும் கலைந்தார்கள். 'என்னய்யா கதாசிரியரே...' என்று கேட்டுக் கொண்டே என் முதலாளி எழுந்தார்...

''கதையை முடிச்சிட்டேனுங்க சிலவுக்குப்பணம் வேண்டுங்க...''

''பணம் இல்லையா?—அடடா! இப்பத்தான் 500ரூபாய் சீட்டாட்டத்திலே தோத்துட்டேன்—இந்தாரும் ஒரு ரூபாய்; பஸ் சிலவுக்கு வ'ச்சிக்குங்கோ - மொத்தத்தை நானே தர்ரேன்'' என்று கூறிக் கொண்டே என்னை அந்த பரிதாபத்துக்குரிய எழுத்தாளரிடம் ஒப்படைத்தார். சூதாட்டத்தில் தோற்றுப் போவதற்கு பணம் இருக்கிறதாம்—இரவை எல்லாம் பகலாக்கி கண்ணெல்லாம் எரிய, எரிய-மண்டை நரம்புகள் புடைக்கப் புடைக்க கதை புனைந்தவருக்கு கொடுக்க காசில்லையாம்-பணம் படைத்தோரிடம் குணம் இருப்பதில்லை-செல்வம் படைத்தவரிடம் இரக்க சிந்தை இருப்பதில்லை-என்பது எவ்வளவு உண்மை! இந்தக் கல்நெஞ்சக்காரரிடம் இருந்ததால் எரிமலையாகியிருந்த என் உள்ளம், அந்த கதாசிரியரின் கையிலே தவழ்ந்ததால் சிறிது அறுதல் அடைந்தது.

என்னைத் திருப்பித்திருப்பி பார்த்துக் கொண்டே தன் வீட்டை நோக்கிச் சென்றார் அந்த சிந்தனை சிற்பி. வறுமையால் வாடும் அந்த குடும்பத்தைக் காணவே சகிக்கவில்லை எனக்கு.பசியால் துடித்துக் கொண்டிருந்தான் பச்சிளம் பாலகன் ஒருவன். தாயின் காய்ந்த மார்பகங்களை சப்பிக் கொண்டிருந்தது ஒரு பசலை. என் முதலாளி ஓடோடியும் சென்றார்பலசரக்குக் கடை நோக்கி. நான், கைமாறினேன். வறுமைத் தேள்கொட்டும் அந்தக் குடும்பத்துக்கு என்னால் ஒருவேளை உணவு அளிக்க முடிந்ததை எண்ணி மகிழ்ந்தது என் நெஞ்சம்.

பலசரக்குக்கடை முதலாளியின் கல்லா பெட்டியிலே சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டேன். கடையைச் சுற்றி ஒரு கண்ணோட்டம் விட்டேன்...என்ன அக்கிரமம்... புளியிலே கொட்டைகள் அப்படியே இருந்தன. அதையும், எடை போட்டு விற்றுக் கொண்டிருந்தார். அரசியிலே மணல்—நெய்யிலே 'கா'சாக்கிக்கொண்டிருந்தார். இந்த அக்கிரமத்தை உலகறியக் கூவலாமா என நினைத்தேன்... நான் சொன்னால் யார் நம்பப் போகிறார்கள்? வேதனை என் இதயத்தைத் துளைத்தது. இரக்கமே இல்லா அரக்கர்களா இந்த மனிதர்கள்? மனதையும், 'அடகு' வைத்து விடுகின்றார்களே! இதயமே இல்லையா இவர்களுக்கு...... சிந்தித்துக் கொண்டே தூங்கிவிட்டேன் போலிருக்கிறது.

நான் விழித்தபோது என் எஜமானன் கடையை மூடிக்கொண்டிருந்தார். கல்லாப் பெட்டியில் தூங்கிக்கொண்டிருந்த எங்களை சுமந்துகொண்டு புறப்பட்டது அந்த 'பொதிமாடு'. தன் தொந்தியைத் தடவியபடியே ஊர்ந்தது அந்தச் 'சித்தானை'. இவனிடம் சிக்கிக் கொண்டோமே—எப்படி தப்பிக்கப் போகிறோம் — இவனது இரும்புப் பெட்டியிலே துருப்பிடிக்க வேண்டியதுதானோ என்று எண்ணியபடியே சென்றேன்.



'சாமி—ரிக்ஷாங்கோ' என்ற குரல் என் சிந்தனையைக் கலைத்தது. 'டேய் யானைக்கவுனி வர்றியா-என்ன கேட்கிறே?'

'எட்டணு கொடுங்கோ சாமி'

'முடியாது — நாலணுக்கு மேல் சல்லி கொடுக்கமாட்டேன்...'

'சரி வாங்க...'

என் 'மாமிச மலை' ரிக்ஷாவிலே ஏறிக்கொண்டது.

விலா எலும்பு வலிக்க வலிக்க-மூச்சுத் திணறத் திணற — கால் நடுங்க நடுங்க — இதயம் படபடக்க — வியர்வை சொட்டச் சொட்ட இழுத்துச் சென்றது அந்த 'மனித மாடு'! மனிதனை மனிதன் இழுக்கிறான்—மாடு செய்யும் வேலையை மனிதன் செய்கிறான். என்ன கொடுமை! என்ன மடமை!

என்னைத் தூக்கிவிட்டெறிந்தார். ரிக்ஷாக்காரனிடமிருந்த என் தம்பிமார்கள் என் பழைய இடத்திற்குச் சென்றார்கள். மிருகத்திடமிருந்து தப்பினோமே என்று எண்ணி மகிழ்ந்தது என் உள்ளம். அனல் கக்கும் அந்த ரிக்ஷாக்காரன் கரங்களிலே, அழுது அழுது சர்த்துப் போயிருந்த என் நெஞ்சைப் புதைத்துக்கொண்டேன். வியர்வை நாற்றம் என் மூக்கைத் துளைத்தது. அவன் விட்ட பெருமூச்சு நெருப்பாகச் சுட்டது.

சோர்ந்து தள்ளாடித் தள்ளாடி போய்க் கொண்டிருந்தான் என் புதிய முதலாளி. களைத்துப் போயிருந்த அவன் உள்ளத்துக்கு 'தெம்பு' தேவையாக இருந்தது. தன் அயர்வை போக்கிக் கொள்ள பட்டை சாராயத்தை நாடிச் சென்றான். என்னை விற்று தன் உடலிலே போதையை ஏற்றிக்கொண்டான். அந்த பரிதாபத்திற்குரியவன். உழைக்காமல் ஊதியம் கிடைத்த அடித்துக் கொண்டே புறப்பட்டான், சந்துமுனைச் சிங்காரிகளை அந்தி நேரத்து அழகிகளைத் தேடி-வாடி-வதங்கிப் போன மலர்கள் 'வா' என்றழைத்தது அந்த வண்டை. உடலை விற்று உணவு தேடும் சடலங்கள்—மானத்தை இழந்து வாழும் மாமிசப் பிண்டங்கள்—காசைக் கொடுத்து கற்பை சூறையாடும் கயவர்கள்—பெண்களின் பொக்கிஷமாம் கற்பை விலை பேசும் வீணர்கள்—இந்த வையகத்தில் வாழத்தான் செய்கின்றார்கள்!

தெம்மாங்குப்பாட்டை இசைத்துக் கொண்டே குடிசைகள் நிரம்பிய பகுதியை வட்டமிட்டது என் வல்லூறு— ஒரு மாடப்புறு கிடைக்காதா, தன் கூரிய அலகால் பிராண்டலாம் என்று எண்ணியபடியே. வாலைக் குமரி ஒருத்தி அவ்வழியே வந்தாள். வேதனையால் தாக்குண்ட அவள் முகம் வாட்டமுற்றிருந்தது. கன்னங்கள் ஒட்டியிருந்தன. அவள் உடுத்தியிருந்த கந்தை அவளின் அங்கங்களை மறைக்கக்கூடப்போதவில்லை.என் கழுகின் கூரிய விழிகள் அத்தையல் மீது பாய்ந்தன...மரத்தடியே மஞ்சமாகியது...என்னை அவள் மேல் வீசி எறிந்து விட்டு, திரும்பிப் பார்க்காமல் சென்றான். அவளின் கற்பை கொத்திச் சென்றான்...என்னை எடுத்துப் பார்த்தாள் அவளின் கண்கள் குளமாகின... இத்தனை நாள் வறுமைத் தேள் கொட்டிய போதுங்கூட, கட்டிக் காத்த என் கற்புக்கோட்டை, இன்று தூள் தூளாகி விட்டதே... எச்சில் பண்டமாகி விட்டேன் நான்......கசங்கி விட்டது என் வாழ்வுச் சோலையில் பூத்தமலர். திரிந்த பால் எதற்கு உதவும்? சாக்கடையில் கொட்டவேண்டியதுதான் என்று எண்ணி எண்ணி கண்ணீர் விட்டாள். இரண்டு சொட்டு கண்ணீர் என் மேல் விழுந்தன...! நான் பிறந்த இடத்திலே—உலைக்கூடத்திலே—என்னை உருவாக்கினார்களே, அந்த அனல் கூட என்னை அவ்வளவு சுடவில்லை. ஆனால் இந்த இரண்டு சொட்டு கண்ணீர் என்னை சுட்டெரித்தது. வேல் கொண்டு தாக்கியது போலிருந்தது, அந்த சேல் விழியாளின் கண்ணீர். என்னை ஏந்திக் கொண்டிருந்த கைகளால் தன் முகத்தை அறைந்து கொண்டாள் அந்த அபலை. அவளின் கண்ணீர்க் கனலை என்னால் பொறுக்க முடியவில்லை. மெள்ள நழுவினேன்... இருண்ட இருளிலே உருண்டோடினேன்... அவசரத்திலே ஓடியதால் அருகே ஓடிக்

★ தொடர்ச்சி 14-ம் பக்கம்

தோழர் வி. எம். ஜான்
(நாஞ்சில் மாவட்ட தி. மு. க.

"எழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே..
காக்கை மூக்கு நிழலிலே...
கண்டாலும் 'கம்மாளர்' கண்ணிலே...
எழுபது கோடி பசும்பொன்..."

மருங்கப்பள்ளம் கிராமத்திலே புதையல் இருப்பதாக வதந்தி—அதைத் தோண்டி எடுக்க, வெள்ளியம்பலம் என்ற பெரிய புள்ளியும், ஐயப்பன் என்ற ஒரு படகுக்காரத் தடிக் கிழவனும் தனித்தனியே முயலுகிறார்கள். நரபலி கொடுத்து புதையலை எடுக்க, துரையின் தங்கையை இலங்கையிலிருந்து வஞ்சகமாக ஒரு சாமியார் அழைத்து வந்து பலியை நிறைவேற்றியும் அந்தப் புதையல் கிடைக்கவில்லை. சாமியாரே கிணற்றில் விழுந்து சாக நேருகிறது. அந்தப் புதையலைக் கண்டு பிடிக்க, ஒரு செப்பேடும், சிறு கல்லும் இருப்பதாகவும், அது யாரிடமோ சிக்கி கைதவறி விட்டதாகவும் ஊரார் பேசிக் கொள்கிறார்கள். அந்த செப்பேட்டையும் சிறு கல்லையும் மாயாண்டி என்ற கிழவரின் மடியிலே பார்க்கிறான் ஐயப்பன். அவன் மாயாண்டிக்குக் குறிவைக்கிறான்.

புதையல் இருக்குமிடம் பரிமளம் என்ற பெண்ணின் காதலனுக்குத் தெரியுமென்று கருதி, அந்தக் காதலனைத்தேடி அலைகிறார் வெள்ளியம்பலம்.

மாயாண்டிக் கிழவரோ புதிய தத்துவங்கள் பேசும் புதிய மனிதராக இருக்கிறார். செப்பேடு, சிறு கல்—யாருக்குக் கிடைப்பது? யார் புதையலை எடுப்பது? இந்த சிக்கலோடு சேர்ந்து வளருகிறது சிலோனில் சீரழிந்த ஒரு குடும்பத்தின் கதையும்—சிந்தை கவரும் ஒரு காதல் வரலாறும்!

முன் கதை......

வெள்ளியம்பலம் மருங்கப் பள்ளத்தில் ஒரு பெரிய புள்ளி. பணபலத்திலல்ல-படைபலத்தில். அந்த ஊர் சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் எங்கேயோ ஓர் இடத்தில் புதைந்து கிடக்கும் பொன் குவியல்களைத் தோண்டி எடுக்கும் முயற்சி பல நாளாக நடந்து வருகிறது. அப்படி ஒருநாள் வெள்ளியம்பலம் ஜோசியரிடம் நல்ல நாள் பார்த்து, இருட்டில் குறிப்பிட்ட இடத்தில் தோண்டிப் பார்க்கச் செல்லும்போது, கோயிலுக்குப் பின்புறத்தில் இருகாதலர்களின் உரையாடல் கேட்கிறது. துரையும்-பரிமளமும்தான் அவர்கள். துரை, பரிமளத்திடம் 'அதோ அந்த மாமரத்தடிதான் தங்கத்தைப் புதைத்த இடம்!' என்றுசொல்லுகிறான். அந்த வாக்கியம் காதிலே விழுந்ததும், 'எது தங்கத்தைப் புதைத்த இடம்?' என்று ஆவலுடன் அவர்களிடம் வெள்ளியம்பலம் ஓடுகிறார். திடுக்கிட்ட காதலர்கள்-சில மைல் தூரம் ஓடி, வெள்ளியம்பலத்தின் ஆட்களிடமிருந்து தப்பி, கடற்கரையில் வானளாவ நிற்கும் மனோரா பக்கம் போகிறார்கள்—ஓடுகையில் துரை விட்டுச் சென்ற ஒரு செருப்பையும், பரிமளாவின் மேலங்கியையும் வெள்ளியம்பலம் எடுத்துச் செல்கிறார். மனோரா பக்கம் சென்ற காதலர்கள் மாயாண்டிக் கிழவர் செய்யும் பிரார்த்தனையைக் கேட்கிறார்கள். கிழவர் கள்ளத்தோணியில் போவதற்கு காதலர்கள் தடையாக இருந்து விடுவார்கள் என்று பயந்து, அவர்களை அடித்து, கட்டிப் போட்டு மயக்கமுறச் செய்து, தான்தந்த அந்தத் துன்பத்திற்கு விளக்கமும் கொடுத்து விட்டு, கள்ளத்தோணியில் ஏறிக்கொள்கிறார். அவருடைய மடியில் ஒரு சிறு முடிச்சும் தாள்உரையும் இருக்கிறது. பரிமளா துரையிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்புகிறாள்.

பின்னிருட்டு—படகு கடலில் போய்க் கொண்டிருந்தது. படகிலே வேறொரு கிழவர்-பெயர் ஐயப்பன். மாயாண்டிக் கிழவனும் ஐயப்பக் கிழவனும் பேச்சை வளர்த்துக்கொண்டுபோகிறார்கள். பொன்கிட்டத்திற்குஆசைப்பட்டு கொல்லர் குடும்பம் கொலையுண்ட கர்ணபரம்பரைக் கதையை மாயாண்டிக் கிழவர் ஐயப்பக் கிழவனிடம் சொல்லுகிறார். படகு போய்க் கொண்டிருக்கிறது.

வீடு சேர்ந்த பரிமளா தன்னை ஒரு மோகினிப் பிசாசு தூக்கிப் போய் விட்டதாகச் சொல்லுகிறாள். மகள் மேலுள்ள பாசத்தால் தாயார் அஞ்சலை நம்புகிறாள். தந்தை தாண்டவன் நம்பவில்லை. மகள் மீது அவநம்பிக்கை ஏற்படுகிறது அவருக்கு. தெருவில்போய்க் கொண்டிருந்த வெள்ளியம்பலம் கூச்சல் கேட்டு, தாண்டவன் வீடு நுழைந்து செய்தியை விசாரிக்கிறான். தன் மகளை மோகினிப் பிசாசு தூக்கிச் சென்றிருந்தால் தூக்கிச் சென்ற இடத்தில் ஒரு அடையாளம் கேட்கிறார். போய் பார்த்ததில் பரிமளா சொன்ன அடையாளம் சரியாக இருக்கிறது. ஆனால் அந்த இடத்தில் ஒற்றை மிதியடி ஒன்று கிடந்தது. தாண்டவனுக்கு ஐயம் நீங்கவில்லை.

வெள்ளியம்பலத்திற்கு ஒரு சந்தேகம். கடந்த இரவு தான் கண்ட காதல் ஜோடிகள் பரிமளாவும் அவள் காதலனும் தானோ என நினைக்கிறார். புதையல் ரகசியமறிய துடிக்கிறார். துடிப்பின் எல்லையில் முடிவொன்றும் செய்கிறார்.

நடுக்கடலில் மாயாண்டிக் கிழவரும் ஐயப்பக் கிழவரும் வாயாடிக் கொண்டே போகிறார்கள். மாயாண்டிக் கிழவரின் மடியிலே உள்ள செப்பேட்டை ஐயப்பக் கிழவர் பார்த்து விடுகிறார். அதை எப்படியும் பறித்துவிட ஐயப்பக் கிழவர் துடிக்கிறார்.

இரவு வந்தது. தன் மகள் பரிமளத்தின் நடத்தையிலே சந்தேகப்பட்ட தாண்டவன், அவளை அன்று இரவே தீர்த்து விடுவது என்ற முடிவோடு பரிமளாவின் அறைக்குள் போகிறார். அந்த நேரத்தில் அம்பலத்தால் ஏவப்பட்ட சில முரடர்கள் பரிமளாவை கட்டித் தூக்கிக் கொண்டிருக்கிறார்கள். தாண்டவன் அந்த அறைக்குள் நுழைந்ததும் அந்த முரடர்கள் தாண்டவனையும் கட்டிப் போட்டு விட்டு பரிமளாவைத் தூக்கிக் கொண்டு ஓடிவிடுகிறார்கள். கூச்சல் கேட்டு எழுந்த அஞ்சலை மறுபடியும் தன் மகளை மோகினிப் பிசாசு தூக்கிப் போய்விட்டதாகக் கதறுகிறாள்.

நடுக்கடலில் போய்க் கொண்டிருந்த படகில் மாயாண்டியிடமிருந்த புதையல் செப்பேட்டைப் பறித்துவிட ஐயப்பன் முயலும்போது, துரை போலீஸ் உடையில் சென்று வழிமறித்து, மாயாண்டிக் கிழவரையும் மற்றவர்களையும் கைது செய்து கரைக்கு இழுத்து வருகிறான்.

பரிமளாவைத் தூக்கிப் போன வெள்ளியம்பலத்தின் ஆட்கள் அவளை மனோராவுக்குக் கொண்டு செல்லுகிறார்கள். அப்போதுதான், தன்னை தூக்கி வந்தது வெள்ளியம்பலம் ஏவிவிட்ட கைக்கூலிகள் என்பது பரிமளாவுக்குப் புரிகிறது. வெள்ளியம்பலம்-பரிமளாவிடம் அவளுடைய காதலன் யார் என்று நிர்பந்தம் செய்து கேட்கவே, பரிமளம் அவளுடைய பள்ளிப் பாதையில் பல இடையூறுகள் செய்து வந்த துக்காராமை சொல்லி வைக்கிறாள். வெள்ளியம்பலத்தின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அதே நேரத்தில் கிழவரை பிடித்துவந்த துரையின் கோஷ்டி மனோரா நோக்கி வருவதை அறிந்த வெள்ளியம்பலத்தின் குழுவினர் மிரண்டு ஓடுகிறார்கள். துரை, பரிமளாவின் இக்கட்டான நிலையை அறிந்து அவளை அணைத்துக் கொள்கிறான்.

பிடித்து வரப்பட்ட கிழவர்களில் ஐயப்பன் குழுவினர் மிரட்டி விரட்டப்படுகின்றனர்.

துரை, மாயாண்டிக் கிழவரை மட்டும் வசப்படுத்திக் கொண்டு

புதுப்பட்டணத்திலுள்ள தன் இல்லத்திற்கு அழைத்துச் செல்லுகிறான். இவ்வளவு நெருக்கடியிலும், தன்னை மிரட்டிக் கொண்டிருப்பது போலீஸ்காரர்கள் அல்லவென்றும், தன்னால் மனோராவில் நேற்று துன்பப்படுத்தப்பட்ட இளங் காதலர்கள்தானென்றும் கிழவர் உள்ளூர அறிந்து கொள்கிறார்.

ஆனாலும் அடிக்கடி, தன் மடியிலிருந்த செப்பேட்டை தடவிப் பார்த்துக் கொள்ளாமலில்லை.

வெள்ளியம்பலம் பட்டுக் கோட்டைத் தெருவிலே நின்று கொண்டு பரிமளா கூறிய அவளுடைய காதல(!)னை துக்காராமின் விலாசத்தைக்கொண்டு துக்காராமைக் கண்டு, பரிமளா பற்றி ஆசை வார்த்தைகள் சொல்லி, துக்காராமை மருங்கப்பள்ளத்திற்கு அழைத்து வந்து விடுகிறார். தங்கத்தைப் புதைத்த இடத்தை அறியவே அம்பலம் துக்காராமை கூட்டி வருகிறார்.

ராமன், வெள்ளியம்பலத்தின் வேலைக்காரன். வெள்ளியம்பலம் துக்காராமை ராமனிடம் ஒப்படைத்துவிட்டு பரிமளத்தின் வீடு செல்கிறார். அங்கே ஒரே ஏமாற்றம்! 'பரிமளா நேற்றிரவு கள்ளக் காதலனால் தூக்கிச் செல்லப்பட்டு விட்டாள்'' என்று பரிமளாவின் தந்தை ஆத்திரத்தோடு சொல்லுகிறார். வெள்ளியம்பலம் தாண்டவனுக்கு ஆறுதல் கூறி விட்டு வெளியேறுகிறார். ஆனால் அம்பலத்தின் உள்ளத்தில் அமைதியில்லை. பரிமளத்தை வசப்படுத்தியிருப்பது கடற்கரையில் கண்ட போலீசாராகத்தான் இருக்குமென அம்பலம் நினைக்கிறார்.

துரையின் கோஷ்டியுடன் புதுப் பட்டணம் சேர்ந்த மாயாண்டிக் கிழவர் உடல் நலம் பெற்று எழுந்து நடமாடுகிறார். அந்த இளங்காதலர்களின் வரலாற்றைத் தெரிந்துகொள்ள கிழவர் துடிக்கிறார். அந்த நேரத்தில் ஒரு உருவம் கையில் கத்தியோடு மறைவில் நிற்கிறது.

துரை தன் கதையைச் சொல்லுகிறான்;

'' தமிழகத்தில் பிறந்த என் பாட்டன் பெரிய பணக்காரர். தானதர்மங்கள் செய்து தரித்திர நிலை அடைந்துவிட்டார். அவர் காலமானபின், பாட்டியின் மேற்பார்வையில் குடும்பம் நடைபெற்றது. ஆனால் தாயகத்தில் மானத்தோடு வாழ வழியேதும் கிடைக்காததால், மூன்று உறுப்பினர்களைக் கொண்ட அந்தக் குடும்பம் இலங்கைக்குக் கப்பலேறியது. அங்கு என் அப்பாவும், அம்மாவும் மிக ஒற்றுமையாக இல்லறம் நடத்தி வந்தார்கள். டாக் துரையின் தேயிலைத் தோட்டத்தில் வேலை பார்த்துக்கொண்டே என் தந்தை சொந்தத்தில் வள்ளிக் கிழங்கும் பயிரிட்டு வந்தார். இலங்கையில் தான் நானும், என்னைவிட ஐந்து வயது சிறிய தங்கை தங்கமும் பிறந்தோம்.



டாக் துரை ஒரு ஸ்திரீ லோலன்! அந்தக் கொடியவனுக்கு என் தாய் வள்ளிமீது ஒரு கண் இருந்து வந்ததாம்! அதற்கு துணை புரியும் கிராதகச் செயலை காளிமுத்து என் பான் செய்து வந்திருக்கிறான்.

டாக் துரைக்கு மேரி என்று ஒரு மகளுண்டு. அவளுடைய காதலன் ஜோசப். ஜோசப்புக்கு இந்தியாவில் வேலை கிடைக்கவே, அவன் இந்தியா பயணமானான்.

மேரி, மேனா மினிக்கி! இளமையைச் சுவைத்து, வாலிபர்களை எலும்புக் கூடுகளாக்கும் அட்டைப் பூச்சியாக மாறிவிட்டாள் அந்த வெள்ளை மாது. கடல் கடந்து சென்ற தன் காதலனை—சிந்தை கவர்ந்த ஜோசப்பை மேரி பொருட்படுத்தவில்லை.

ஒரு நாள் என் தந்தை குமாரவடிவு மேரியின் வெறியாட்டத்தில் சிக்கிக்கொண்டார். அந்த வெள்ளைப் பெண், பரம சாதுவான என் தந்தையை பலவந்தப் படுத்தி கட்டிப்பிடித்தாள். இந்தக் காட்சியை தற்செயலாகக் கண்ட என்தாய் வள்ளி, என் தந்தையைத் தவறாகப் புரிந்துகொண்டார். அன்றே, என் தாய்-தந்தை உறவில் முறிவு ஏற்பட்டுவிட்டது.

என் தாய் வள்ளிமீது டாக் துரைக்கு ஒரு கண் என்று சொன்னேனல்லவா! ஒரு நாள் வள்ளியம்மா தோட்ட வேலைக்குச் செல்லவில்லை. இதையறிந்த தரகன் காளிமுத்துவும், டாக் துரையும் என் தாயார் இருக்குமிடம் வந்து அவர்களை மிருகத்தனமாகப் பலவந்தப் படுத்தியிருக்கிறார்கள். மானம் போய் உயிர்வாழ நினையா என் தாய், அந்த மனித மிருகங்களை கத்தியால் குத்திவிட முனைந்தார்கள். என்னதான் நெஞ்சுரமிருந்தாலும் இரு ஆடவர்களிடம் ஒரு பெண் என்ன செய்ய இயலும்! என் தாயின் கைக் கத்தியாலேயே அந்த முரடர்கள் வள்ளியம்மாவை பிணமாக்கிவிட்டு ஓடிவிட்டார்கள்.

என் தந்தை அதே நேரத்தில் வீட்டில் புகுந்ததை அறிந்த டாக் துரையும், காளிமுத்துவும் போலீசை ஏவினார்கள். கொலை வழக்கு கையும் களவுமாக பிடிபட்டது என்ற மகிழ்ச்சியோடு என் தந்தையைக் கைது செய்தார்கள். எங்கள் வீட்டுச்சாமான்கள் பரிசோதிக்கப் பட்டன. என் தந்தையின் டைரியில் 'முதல் தேதி வள்ளி வெட்டப் படவேண்டும்' என்று எழுதியிருந்தது. என் தாயாரை டாக் துரை குத்தியதும் முதல் தேதியாகையால் டைரியிலிருந்த அந்த ஆதாரத்தைக் கொண்டு நீதி மன்றம் என் தந்தைக்கு ஜன்ம தண்டனை விதித்தது. ஆனால் என் தந்தை டைரியில் குறிப்பிட்டிருந்தது என் தாய் வள்ளியை அல்ல; வள்ளிக் கிழங்கைத்தான் என்று நீதி மன்றத்திலே வாதாட எங்களுக்கு வக்கீலில்லை. வறுமையின் சிறு தாக்குதல் ஒரு குடும்பத்தின் வரலாற்றையே மாற்றி அமைத்துவிட்டது.

எங்கள் குடும்பத்தின் முழுப் பொறுப்பு என் பாட்டி வசமாயிற்று. தாயில்லாமல் தத்தளித்த என் தங்கை தங்கமும், நானும் எப்படியோ பாட்டியின் கண்காணிப்பிலேயே வளர்ந்துவந்தோம்-முதுமை என் பாட்டியையும் விழுங்கிவிட்டது. நாங்கள் அனாதைகளானோம்.

ஒரு நாள் ஒரு காவி உடைச் சாமியார் வந்தார். எங்கள்மேல் இரக்கப்பட்டு எங்களை இந்தியாவுக்கு அழைத்து வந்தார்.

அப்போது என் தங்கைக்கு வயது பத்து. நான் வாலிபத்தின் முதற் படியிலிருந்தேன். தென்னாடு வந்துசேர்ந்த நாங்கள் சாளுவ நாயக்கன் பட்டினம் வந்தோம். அந்த யோகி மறுநாள் நாடியம் மடாலயத்தில் எனக்கு வேலை வாங்கித் தருவதாகவும், என் தங்கையை பள்ளியில் சேர்த்து விடுவதாகவும் சொன்னார். நாங்களும் இணங்கினோம்.

மருங்கப்பள்ளத்திலிருக்கும் சிவன் கோயிலில் அன்றிரவு தங்க முடிவு செய்தோம். நடு நிசி! விழித்துப் பார்த்தேன்! பயந்து விம்மிக்கொண்டிருந்த என் தங்கையைக் காணவில்லை! சுற்றுமுற்றும் பார்த்தேன். சாமியாரையும் காணவில்லை. கத்தினேன். கதறினேன். சற்று தொலைவில் ஒரு கூச்சல் கேட்டது. ''எழுவானுக்கும், தொழுவானுக்கும் இடையிலே-காக்கை மூக்கு நிழலிலே—பசும் பொன்! பசும் பொன்!'' இவைதான் அந்தப் பேய்க் கூச்சல்! ஒலி வந்த திக்கை நோக்கி ஓடினேன். 'நரபலி தந்துவிட்டேன்; புதையல் எங்கே?' என்று அதே குரல் மறுபடியும் ஒலித்தது. அந்தக் கோரக் காட்சியை இப்போது நினைத்தாலும் நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது. என் அருமைத் தங்கை துண்டு துண்டாக வெட்டப்பட்டுக் கிடந்தாள். அந்தத் துண்டுகளை எடுத்து அவன் புதைத்தான் அவசர அவசரமாக! மருங்கப்பள்ளத்தில் புதைந்துகிடக்கும் புதையலை எடுக்க எண்ணி இந்த நாச காரியத்தைச் செய்த சாமியார், கையில் ரத்தம் படிந்த கத்தியோடு நின்றார். ஏதோ ஒரு சிலை அங்கு நாட்டப்பட்டிருந்தது. எனக்கு ஆத்திரம் தாங்கவில்லை. அங்கிருந்த அரிவாளை எடுத்தேன். சாமியார் ஓடினார்—பின்தொடர்ந்தேன். அந்த வேடதாரி கால் தவறி ஒரு பாழுங் கிணற்றில் விழுந்துவிட்டான்.

அவன் செத்து ஒழியட்டும் என்று பெருங் கற்களைத் தூக்கி கிணற்றுக்குள் வீசி எறிந்துவிட்டு கால்போன திக்கெல்லாம் நடந்தேன், புதையுண்ட என் கண்மணியை மீண்டும் தோண்டி எடுக்க விரும்பாமல்!

✱

புதிய தொடர்......
10-ம் பக்கத்தில்





கொடி பரிமளாவும், 'மர்மக் கிழவர்' மாயாண்டியும் தவிர, கத்தியோடு கொல்லையில் காத்திருக்
ந்தப் புரியாத உருவமும் கேட்டுக்கொண்டிருக்க—துரை தன் கதையைத் தொடருகிறான்...

21.
துரை தொடருகிறான்!

"சாகக் கூடிய வயதல்ல—ஆனாலும் அம்மா சாகடிக்கப் பட்டார்கள்—சருகாசமாறியும் சலியாது உழைத்த பாட்டியை சாவு அழைத்துக்கொண்டது.

தந்தையோ சிறைச்சாலையில் வாடுகிறார் என்பது மட்டும் தெரியும்—எங்கே, எப்படி? அது தெரியாது. அன்புக்குத் துணை—ஒரே ஒரு அருமைத் தங்கை—அதையும் அந்த எருமை மனிதன், புதையலுக்கு எருவாகப் போட்டுவிட்டுப் போய்விட்டான். உலகம் மட்டுமல்ல; என்னுடைய எதிர்காலமே இருள் மூடிக் கிடப்பதாகத் தோன்றியது.

நடுநிசி—'எங்கே போகிறாய்?' என்று என்னையே நான் கேட்டுக்கொண்டேன். கேட்கத்தான் முடிந்ததே தவிர, பதில் சொல்ல முடியவில்லை. மழை வரப்போவதை அறிவிக்க இருட்டிலே கத்திக் கொண்டிருந்த கிருட்டிகளுக்குக்கூட ஒரு லட்சியம் இருந்திருக்கும்—அதுகூட இல்லை எனக்கு. வானம் வேறு உறும ஆரம்பித்தது. இருளின் கனம் அதிகமாகிக்கொண்டே வந்தது. லேசான மழைத் தூறல்கள் — ஆகா; அந்த சமயத்தில் எனக்கு எப்படியிருந்தது தெரியுமா? மழைத் துளிகள் என் முகத்திலே பட்டுத் தெறித்துச் சிதறுவதும்—என் ஆடைகள் மெல்ல மெல்ல ஈரமேறுவதும்—ஏதோ ஒரு விதமான விரக்தி மனப்பான்மையை அளித்தது.

நானும் தங்கையும் மழையைக் கண்டாலே மயில்போலக் குதிப்போம் முன்பெல்லாம். மழைத் துளிகளிலே நிற்பதை விட ஆனந்தம் வேறு இல்லை என்று எண்ணுவோம். 'உடம்புக்கு ஆகாது; உள்ளே வாங்க' என்று பாட்டி அன்பாகக் கோபிக்கிற வரையிலே மழையிலே நனைந்துகொண்டு ஆடுவோம்; பாடுவோம். வீட்டுக்குள்ளே வந்துவிட்டால் கூட, திண்ணையிலே அமர்ந்து மழையை ரசிப்போம். தெருவிலே சிறு சிறு வாய்க்கால்கள்போல நெளிந்தோடும் மழைத் தண்ணீரிலே நாங்கள் மிதக்கவிட்டிருக்கிற காகிதப்படகுகள் எவ்வளவு? கம்பீரமாக மிதந்து செல்லும் எங்கள் படகுகளின்மீது மழைத் துளிகள் படுவதும், பின்னர் அவை ஈரத்தால் கனத்து உருவிழந்து பழைய காகித உருவிலேயே நீரில் கரைவதும்—அதற்காக நானும் தங்கையும் 'ச்சு' கொட்டி அனுதாபம் தெரிவிப்பதும்—இன்றல்ல; என்றும் மறக்கமுடியாத நிகழ்ச்சிகள். அப்படியெல்லாம் மழையை ஒரு விருந்தாகக் கருதிய நான்தான், அந்த நடு நிசியிலே தூறல் கண்டு துடித்துப் போனேன்.

நானும் தங்கையும் அன்று போட்டி போட்டுக் கொண்டு காகிதப் படகுகள் விட்டோம். என் படகு முதலில் கவிழ்ந்து விட்டது — அப்போது தங்கை எப்படிக் கூத்தாடியது தெரியுமா? அது கூத்தாடிக் கொண்டிருக்கும்போதே திடுக்கென நின்றுவிட்டது. நான், தெருவைப் பார்க்காமலே, தங்கையின் முகத்தைப்பார்த்து, அதன் படகும் கவிழ்ந்து விட்டது என்று தெளிவாகச் சொன்னேன். இப்போது—காகிதப் படகல்ல—என் தங்கப் படகு, எனக்கு முன்பே கவிழ்ந்து விட்டது. நான் நடந்துகொண்டிருக்கிறேன்; என் மீதும் மழைத் துளிகள் வேகமாக விழுகின்றன; இந்த அறுதைப் படகு, எப்போது கவிழுமோ தெரியாது—எண்ண அலைகள் மோதி மோதி இருதயக் கரைகள் அனைத்தும் சீரழிந்துபோன நிலையிலே, கால் காட்டும் வழியிலே போய்க் கொண்டிருந்தேன். பயங்கரமான மின்னல்கள்—உள்ளத்தை உலுக்கும் இடி முழக்கங்கள்—பெரு மழை—பேய்க் காற்று! ஒண்டுவதற்கு இடமில்லை. வெகுதூரம் வரையில் மரம் மட்டைகளும் கிடையாது—வயல் வெளி வரப்பின் மீது அசைவற்று நின்று கொண்டிருந்தேன். இயற்கை அன்னை எனக்கு தலை முழுக் காட்டிக் கொண்டிருந்தாள். தங்கையின் சாவுக்குத் தலை முழுக வேண்டுமல்லவா?—அதை நிறைவேற்றிடுவதாக எண்ணிக் கொண்டே நின்றேன். நீர்வீழ்ச்சியின் கீழே நிற்பதுபோல இருந்தது; அவ்வளவு கனத்த மழை! அந்த மழையை என்னோடு சேர்ந்து ரசிக்க என் தங்கையில்லை. அது மண்ணுக்கு அடியிலே ஆழ்ந்த உறக்கத்திலிருக்கிறது.

விடியற்காலை வரையிலே மழை நிற்கவில்லை. அதன்பிறகு கொஞ்சம் கருணை காட்டியது வானம்—கிழக்கு வெளுக்க ஆரம்பித்தது. கண்ணை அகல விழித்துப் பார்த்தேன். எனக்கு எதிரே சிறிது தூரத்திலே ஒரு கட்டிடம் தெரிந்தது—இரவெல்லாம் அதன் பக்கத்திலேயே நின்றிருக்கிறேன்; ஆனால் அந்த இடம் என் கண்ணுக்குத் தெரியவில்லை. அவ்வளவு இருட்டு! அந்தப் பாதகச் சாமியார் சொன்னானே; அந்த நாடியம் மடாலயம் தான் அந்தக் கட்டிடம். அது இருளிலே மூழ்கியிருந்த காரணத்தால் எனக்குத் தெரியவில்லை. மடங்களையே பொதுவாக இருள் கப்பிக் கொண்டிருப்பதால்தான் ஆதரவற்றோருக்கு அது ஒளி வழங்குவதில்லை என்று சொல்வது இயற்கையிலேயே என் விஷயத்தில் உண்மையாகத்தான் போய்விட்டது. மடத்தை நோக்கி நடந்தேன். மடத்தின் எதிரே பெரியதொரு அரச மரம் வானுற ஓங்கி நின்றது. அதன் உச்சியிலே பறந்து கொண்டிருந்த அன்னதானக் காவிக் கொடி, மழையிலே நனைந்தும், கிழிந்தும், தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு சுருண்டு கிடந்தது. மடத்து வாசலில் ஒதுங்கினேன். எனக்கு முன்னே, உள்ளூர் ஆடுமாடுகள் சில அங்கே ஒதுங்கியிருந்தன. முதுகெல்லாம் புண்ணுள்ள கழுதைகள் இரண்டு மூன்று அங்கே ஒதுங்கி நின்றன. சாணமும், ஆட்டுப் புழுக்கைகளும் நிறைந்திருந்த அந்த இடத்திலே கைகளைக் கட்டிக்கொண்டு குளிரை அடக்கியபடி ஒண்டிக் கொண்டேன். காலைக் கதிரவனின் ஒளி அரும்பிற்று. இரவு முழுதும் பட்ட கஷ்டத்தில் 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டபடி, அப்படியே உட்கார்ந்த நிலையில் சிறிது கண்ணயர்ந்தேன். யாரோ என் முதுகில் தட்டி எழுப்பினார்கள். வாரிச்சுருட்டி எழுந்தேன். புரியாத பாஷையில் பேசினான் அவன். வடநாட்டு ஆள்போலத் தோன்றினான். நாடியத்திலுள்ள மடாலயம், வடநாட்டு சாமியார்களுக்குச் சொந்தமல்லவா; அதைச் சேர்ந்த ஆள்போலும் அவன்.

"அய்யா — உடம்பெல்லாம் நடுங்குது—கொஞ்சம் தூங்க விடு" என்றேன்.

முரட்டுத்தனமாக ஏதோ பதில் சொன்னான். என் தலையிலும் ஒரு குட்டு வைத்தான்.

அவன் பாஷை புரிய வேண்டிய அவசியமென்ன எனக்கு? இருதயம் புரிந்துவிட்டது. அது எத்தகைய பண்புடையது என்பதை என் தலையில் ஏற்பட்ட வேதனை எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தது. மடாலயத்திலிருந்து வெளியேறினேன். எதிரே மரத்தில் தொங்கும் அன்னதானக் கொடியைப் பார்த்தபடி—எனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டு நடந்தேன். பசியின் கொடுமையும் ஆரம்பமாகிவிட்டது. நாடியத்திலே உள்ள வீடுகளில் எல்லாம் சோறு கேட்டேன். வீட்டுக்குக் கொஞ்சம் கிடைத்தது. சாப்பிட்டேன். மிச்சங்கூட ஆகிவிட்டது. அதைக் கீழே எறியவில்லை. சட்டையைக் கழற்றி, அதிலே கொஞ்சம் பூவரசு இலைகளைப் பரப்பி, மீதிச் சோற்றைக் கொட்டி, நன்றாக முடிந்து வைத்துக் கொண்டேன், இரவுக்கு தேவைப்படுமேயென்று!

மறுநாள் பேராவூரணிப் பிரயாணம்—கிராமாந்திர மக்கள்

★ தொடர்ச்சி 13-ம் பக்கம்

அகிலத்து விந்தை-அணுவின் தந்தை!

உலகத்துக்கு விஞ்ஞான ஒளியும் அமைதிக் குரலும் கொடுத்து வந்த ஜீவன் ஓய்ந்துவிட்டது! பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் பௌதீகப் பேராசிரியராகப் பல ஆண்டுகள் அருந்தொண்டாற்றிய ஐன்ஸ்டீன் நம்மைப் பிரிந்து போய்விட்டார். எண்ணத்திற்கு இமயமாகவும், எளிமைக்குக் காந்தியாகவும் வாழ்ந்து, விஞ்ஞான உண்மைகளில் வாழ்க்கையின் தத்துவங்களைக் கண்டு, உலகுக்கு உணர்த்திய நல்லாசானை இழந்து உலகமே கண்ணீர் வடிக்கிறது! பிரின்ஸ்டன் நகரத்து மெர்சர் வீதி, கையில் காகிதமும் சட்டைப் பையில் பென்சிலும் கொண்டு, முகத்திலே சிந்தனையைத் தேக்கி நடமாடிய அந்த முதுக் கிழவரை இழந்து வெறிச்சென்று காட்சியளிக்கும்! உலகம்—அதைச் சூழ்ந்து இயங்கும் கோள்களின் தன்மை, போக்கு முதலியவற்றை ஆராய்ந்து, அவற்றில் மறைந்திருக்கும்

இரகசியங்களை வகைப்படுத்தி, வானாராய்ச்சித் துறையை, விஞ்ஞான அறிவின் பிரதான பாகங்களில் ஒன்றாக்கிய பித்தகோரஸ், டாலமி, அரிஸ்டாட்டல், கோபர்னிகஸ், கலிலியோ, கெப்லர், நியூட்டன் போன்ற கணித மேதைகளின் வரிசையில் எட்டாமவரும், இந்த நூற்றாண்டுக்குச் சொந்தக்காரருமான ஐன்ஸ்டீன் மறைவு உலகுக்கு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்!

கூர்மையான ஒளி பொருந்திய கண்கள், சிந்தனைக் கோடுகள் படிந்த பரந்த நெற்றி, ஒழுங்காக வாறிவிடப்படாத நீண்ட வெண்மயிர், கம்பீரமான தோற்றத்திற்கு எழில் செய்யும் எளிமை, விஞ்ஞான வளர்ச்சியால் உலகம் உய்ய வேண்டுமென்ற பேராவல், அணு சக்திக் கண்டுபிடிப்பிற்கு தான் போட்ட வித்து, நச்சுத் தாவரமாக வளர்ந்து நாச வேலை செய்கிறதே என்ற ஏக்கம், அதைத் தடுத்து நிறுத்தி நிரந்தர அமைதி ஏற்படுத்த வேண்டுமென்ற நல்லெண்ணம்-இவைகளின் தொகுப்புத்தான் ஐன்ஸ்டீன்! அவருடைய மரணம் விஞ்ஞான உலகுக்கு மட்டுமல்ல; உலக அமைதியில் அக்கறைகொண்ட அனைவருக்கும் அதிர்ச்சியாகும்!

1879-ம் ஆண்டு, மார்ச்சு 14-ம் நாள், ஜெர்மனியில் அல்ம் நகரில், யூதர் வகுப்பில் பிறந்த ஐன்ஸ்டீன், மேதைகளுக்குப் பள்ளியில் வழக்கமாகத் தரப்படும் 'உதவாக்கரை'ப் பட்டம் பெற்றார். ஆனால், பதினைன்காம் வயதிலேயே 'இன்டிகிரல் கால்குலஸ்' 'அனலிடிகல் ஜியோமிதி' என்ற கடினமான கணிதப் பகுதிகளைத் தானாகவே கற்றுத் தேர்ந்தார். ஸ்விஸ் நாட்டில் சில காலம் கல்வி பயின்றார். ஸூரிச் பல்கலைக் கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. இருபத்தி மூன்றும் வயதில் 'சிறப்பு ஒப்புமைத் தத்துவம்' (Special Theory of Relativity) என்ற தலைப்பில் அவர் வெளியிட்ட விஞ்ஞானக் கருத்துக்கள் உலகத்தின் கவனத்தைக் கவர்ந்தன. 1906-ம் ஆண்டில் பெர்ன் பல்கலைக் கழகத்தில் பௌதீகப் பேராசிரியராக நியமனம் பெற்றார். அதன் பிறகு ஜர்மனியிலும் கொஞ்சகாலம் பேராசிரியராக வேலை பார்த்தார். 1916-ம் ஆண்டில் அவர் வெளியிட்ட 'பொது ஒப்புமைத் தத்துவம்', பொருள், சக்தி பற்றிய எண்ணங்களிலேயே ஒரு புரட்சிகரமான மாறுதலை உண்டாக்கியது. ஜெர்மன் யூதரான ஐன்ஸ்டீன் அப்பொழுது வேடிக்கையாகக் குறிப்பிட்டார்; "என்னுடைய தத்துவம் சரியானது என்று நிரூபனமாகிவிட்டால், ஜெர்மானியர்கள் என்னைப் பெரிய ஜெர்மன் மேதை என்று போற்றுவார்கள். பிரஞ்சுக்காரர்கள் என்னை 'உலகக் குடிமகன்' என்று உபசரிப்பார்கள். ஆனால் என்னுடைய தத்துவம் பொய்யாகிவிட்டாலோ, பிரஞ்சுக்காரர்கள் என்னை ஜெர்மானியன் என்று அலட்சியம் செய்வார்கள். ஜெர்மானியர்களோ யூதன் என்று என்னைப் புறக்கணிப்பார்கள்!" துன்பச் சூழ்நிலையைக் கூட நகைச்சுவையாக்கி மகிழும் மனப் பண்பு படைத்தவர் ஐன்ஸ்டீன்!

ஐன்ஸ்டீனின் ஒப்புமைத் தத்துவம் வெளிவருமுன், பொருள்—சக்தி இரண்டும் தொடர்பற்ற இரண்டு வெவ்வேறான விஷயங்கள் என்று விஞ்ஞானிகள் கருதினார்கள். பொருளையோ, அன்றி சக்தியையோ ஆக்கவும் அழிக்கவும் முடியாது என்று நம்பினார்கள். ஆனால் ஐன்ஸ்டீனின் தத்துவப்படி பொருள்—சக்தி இரண்டும் ஒரே விஷயத்தின் இரண்டு தன்மைகள்; ஆகவே ஒன்றை இன்னொன்றாக மாற்ற முடியும். அதை விளக்கும் ஐன்ஸ்டீனின் உலகப் பிரசித்தி பெற்ற சூத்திரம்தான்: $E=MC^2$ [E—சக்தி; M—பொருண்மை; C^2—ஒளியினுடைய வேகத்தின் வர்க்கம்] ஆகவே ஒரு பொருளின் பொருண்மையை, ஒளியினுடைய வேகத்தின் வர்க்கத்தினால் (1,86,000 × 1,86,000) பெருக்கினால், அந்தப் பொருள் சிதையும்பொழுது கிடைக்கும் சக்தியின் அளவு கிடைக்கும். இதிலிருந்து பொருளைச் சிதைத்து சக்தியைப் பெறலாம் என்ற உண்மை வெளியாயிற்று. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஐன்ஸ்டீன் வெளியிட்ட இந்த உண்மைதான், இன்று அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு வடிவங்களில் அரசியல் வாதிகளுக்கு அதிர்ச்சியையும், விஞ்ஞானிகளுக்கு வேதனையையும், மக்களுக்கு நிரந்தரமான மரண பயத்தையும் அளித்துவரும் அணுத் தத்துவத்தின் அடிப்படையாகும். ஆகவேதான் அணு சகாப்தத்தின் தந்தை என்று ஐன்ஸ்டீன் அழைக்கப் படுகிறார்.

இந்தக் கண்டுபிடிப்புக்குப் பிறகுதான் சூரியனிலுள்ள பொருள்களெல்லாம் எப்படிச் சக்தியாக மாறி நமக்கு கிடைத்து வருகின்றது என்பதும், இப்படியே நடந்து கொண்டு போனால், சூரியன் ஒரு காலத்தில் அணைந்துவிடும் என்றும் விஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள். ஐன்ஸ்டினின் தத்துவம் இதோடு நின்று விடவில்லை! பொருளும் சக்தியும் ஒரே விஷயங்கள் என்ற அடிப்படையில், ஒளிக் கிரணம் எப்படிப் 'புவி ஈர்ப்புச் சக்தி'யால் பாதிக்கப் படுகிறது என்பதையும் ஐன்ஸ்டின் விளக்கினார். விஞ்ஞானிகள் இந்த விளக்கம் குறித்து சந்தேப்படலாயினர். 1919-ல் ஏற்பட்ட முழு சூரிய கிரகணத்தின்போது விஞ்ஞானிகள் செய்த ஆராய்ச்சி, ஐன்ஸ்டினின் விளக்கத்தை ஊர்ஜிதம் செய்தது!

ஒப்புமைத் தத்துவம் வெளிவரும் முன் ஒரு பொருளை அளக்க நீளம், அகலம், உயரம் என்ற மூன்று அளவிடுகளைத்தான் கணித நிபுணர்கள் அறிந்திருந்தனர். ஐன்ஸ்டீன் 'காலம்—வெளி' என்ற நான்காவது அளவீடும் தேவையென்று வெளிப்படுத்தினார். ஒரு முறை ஒரு அழகிய யுவதி ஒருத்தி ஒப்புமைத் தத்துவத்தை விளக்கும்படி ஐன்ஸ்டீனிடம் கேட்டாள். ஐன்ஸ்டீன் புன் சிரிப்போடு கூறினார்: "கல்வியிற் சிறந்த வயதான பேராசிரியர்களோடு ஐந்து நிமிடம் பேசிக் கொண்டிருந்தாலும், அது ஒரு மணியாகத் தோன்கிறது. ஆனால் உன்னைப் போன்ற அழகிய பெண்ணோடு ஒரு மணி பேசினாலும் அதுஐந்துநிமிடமாகத் தோன்றுகிறது. இதுதான் ஒப்புமை தத்துவத்தின் சாரம்!"—எப்படியிருக்கிறது குமரியின் சந்தேகத்துக்குக் கிழவரின் விளக்கம்!

மின்சக்தி, காந்தசக்தி, புவிஈர்ப்புச்சக்தி எல்லாம் ஒரே தன்மையானவை யென்பதும், ஒளியின் வேகத்தை விட—அதாவது ஒரு செகண்டுக்கு 1,86,000 மைல் — அதிகமான வேகத்தை எந்தப் பொருளும் அடைய முடியாது என்பதும், அப்படி அடைந்தால் பொருள் சிதைந்து முடிவற்ற ஒரு நிலையை அடைந்து சக்தியாகப் பரிணமிக்கும் என்பதும் அவர் கண்ட உண்மைகளில் சில! ஜர்மனியில் நாஜிகள் யூத வேட்டையாடியபோது குடிமகன் என்ற உரிமைகள் பறிபோய் விரட்டப்பட்ட ஐன்ஸ்டீன், அமெரிக்க நாட்டை புகலிடமாகக் கொண்டார். நாஜி ஜர்மனி அவரை உயிருடனோ, அன்றிப் பிணமாகவோ கொண்டு வருவோருக்கு 20,000 மார்க்குகள் (ஜர்மன் நாணயம்) வெகுமதியென அறிவித்தது! அமெரிக்காவிலுள்ள பிரின்ஸ்டன் பல்கலைக் கழகமோ மாதம் 5,000 டாலர் சம்பளத்தில், ஆயுள் முழுமைக்கும் பேராசிரியராக அவ்ரை நியமித்துக் கொண்டது! 1939-ம் ஆண்டு, ஆகஸ்ட் 2-ம் நாள் அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட்டுக்கு, அணுசக்தி பற்றிய ஆராய்ச்சிகள் அணுகுண்டு செய்யும் பக்குவத்தை அடைந்து விட்டன என்று ஐன்ஸ்டீன் எழுதிய கடிதம் தான், 1945-ல் ஹிரோஷிமா, நாகசாகியில் நடந்த நாச வேலைக்குக் காரணமாயிற்று. அதற்காக பிற்காலத்தில் ஐன்ஸ்டீன் எவ்வளவோ மன வேதனைப் பட்டார். 1921-ம் ஆண்டில், பௌதீகத் துறையில் அவர் செய்த ஆராய்ச்சிகளுக்காக அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது. அப்பெருந் தொகையை அப்படியே ஏழைகளின் உதவிக்காக கொடுத்து விட்டார்!

ஐன்ஸ்டீன் ஒரு பெரிய அறிவு உலக மேதையாக இருந்தும், சாதாரண ஒரு மனிதராகவே வாழ்ந்தார். பிரின்ஸ்டன் நகரிலுள்ள அவர் வீடு மிகவும்எளிமையானது. வயலின், பியானோ வாசிப்பதிலும், படகோட்டுவதிலும் அவருக்கு பிரியம் அதிகம். கட்டுப்பாடற்ற சுதந்தரமான வாழ்வு வாழ்வதையே அவர் விரும்பினார். அடக்கமே உருவான ஐன்ஸ்டீன், இஸ்ரேல் நாட்டுத் தலைவர் வீஸ்மன் மரணத்துக்குப்பின் அந்நாட்டுத் தலைமைப் பதவியை ஏற்றுக் கொள்ளும்படி கேட்ட அழைப்பை நிராகரித்து விட்டார். கடவுளைப் பற்றிய கொள்கையில் அவர் ஒரு சந்தேகவாதி. கடவுள் பற்றிய எண்ணங்களில் இவருக்கும் யூதத் தத்துவஞானி ஸ்பினோஸாவுக்கும் அதிக ஒற்றுமை உண்டு. மொத்தத்தில் ஐன்ஸ்டீன் ஒரு மெட்டீரியலிஸ்ட். அவர் இரண்டு முறை திருமணம் செய்து கொண்டார். அவர் கணித நிபுணரான தன்னுடைய முதல் மனைவியை விவாகரத்து செய்து கொண்டபின், தன்னுடைய உறவுப்பெண்ணொருத்தியை இரண்டாந்தாரமாக மணந்து கொண்டார்.

ஒரு முறை ஐன்ஸ்டீனும் அவருடைய மனைவியும் கலிபோர்னியா வானாராய்ச்சி நிலையத்துக்குச் சென்றிருந்தார்கள். அங்குள்ள

பி. சி. கணேசன், [பி. எஸ். சி., பி. டி.]

★ தொடர்ச்சி 14-ம் பக்கம்

மலை மோதும் எதிரொலி-நம் நாடெழுப்பும் கேள்விக்குறி!

வண்டெழுப்பும் கானம் நுகர்வோன், அது பண்பாடிப் பறந்தாடும் சோலையைக் காணுன்; பாட்டிசைத்து, பாதச் சிலம்பொலிக்கும் 'போதை'க்குரல் கேட்போன், குரலுக்குரிய நங்கையினைப் பார்த்திடவோ இயலான். ஏன்? இரண்டு கண்களிருந்தும் இல்லாதவனுக ஆக்கப்பட்டிருக்கிறுன் அவன்; கட்டப்பட்டிருக்கின்றன அவனது கண்கள். பரிதாபத்திற்குரிய அவனது நிலைகண்டு கலங்குவர் அநேகர்.

இப்படிக் கண்கள் இருந்தும் காணுதவனுக ஆக்கப்பட்டிருக்கிருனே ஒருவன், அவனது நிலையில்தான் இருக்கிறது தென்னகத்தின் தொழில் துறை வளர்ச்சி! திராவிடத் தாயின் இரு கண்களாம், சேலத்து இரும்பும், நெய்வேலி நிலக்கரியும் இன்னும் பலனற்றவைகளாகவே கிடக்கின்றனவே, ஜோகன்ஸ்பர்க் தங்கச் சுரங்கங்களிலே-மலேயா ஈயச் சுரங்கங்களிலே இந்த வேட்கைக் குரல் எழும்பியது. இன்று பட்டி தொட்டிகளில் மட்டு மல்ல; பாராளு மன்றத்திலும் ஒலித்த வண்ணம் இருக்கிறது. மலைமோதும் எதிரொலியென—அலைமோதும் கடலோசை என திக்கெட்டும் கேட்கிறது!

ஆனுல், சரியான பதிலில்லை; 'பார்ப்போம்' என்ற சொல்லைத் தவிர பலனேதுமில்லை; பாராண்ட பரம்பரையின் பரிதாபக் குரல் கேட்டு பரிகசித்திடவோ தயங்கவில்லை! கேட்டும் கேளாதவராய்—கண்டும் காணுதவராய் நடமாடி வருகின்றனர், நம்மை நசிக்கிடவே துடிக்கும் நாடாளும் நாயகர்கள்!

இன்று, ஆட்சியாளரின் அந்த அலட்சிய போக்குக்குக் கண்டனம் தெரிவிப்பதைப் போல—அவர்களது மௌனம் அர்த்தமற்றது என்பதை டாவது பிரச்னை தீர்க்கப்படாவிட்டால், முன்னது கிடைத்தும் பலனற்ற நிலையில்தான் இருக்க முடியும். ஆனுல் சேலத்து இரும்போ, பக்கத்திலேயே அதை உருக்கி உருவாக்கும் உயரிய சாதனத்தையும் இயற்கையிலேயே பெற்றுவிட்டது. அந்தப்பெரு முயற்சியிலும் தொல்லைகள் அதிகமில்லை. குறுகிய கால அளவில்—குறைந்த செலவில், அந்தக் கனிப் பொருளைப் பக்குவப்படுத்தும் மார்க்கத்தையும் அந்த நிபுணர் காட்டுகிருர்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரியை அதற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அதன் மூலம் உலைக்கூடங்கள் (பர்னஸ்) அமைத்து தேவையைப் பெருமளவு பூர்த்தி செய்துகொள்ளலாம். அல்லது அந் நிலக்கரியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்து, அதன் மூலம் மின்சாரஉலைக்கூடங்கள் அமைக்கவும் வழிகாட்டுகிருர்.

யாளர்களால். இந்த மலைபோன்ற சாகாத சான்றுகளைக் கொண்டு 'கும்பமேளர் கொலு மண்டபத்தி'லும் தெக்கணத்தின் வாழ்வுப் பிரச்னை பேசப்பட்டிருக்கிறது!

பாராளு மன்றத்தை 'ராஜினுமா' விளையாட்டுக் கூடமாக மாற்றிவரும் டி. டி. கிருஷ்ணனைப்(!) போன்ருேர், "தென்னுடு வடக்கை நோக்கி மடியேந்தத்தான் வேண்டும்" என்பனபோன்ற அதிகார வாடை வீசும் சொற்களை வீசிடவும் முடியாது. அந்த வாய்வீச்சுக்கள் 'டாடா போன்ற பணப்பேய்களின் நிரந்தர 'மார்க்கெட்' டாகத்தான் தென்னகம் காலமெல்லாம் இருக்கவேண்டும்' என்ற உள்ளத்து எண்ணத்தை புலப்படுத்தூவே செய்யும்.

"சரித்திரப் புகழ் பெற்றது எமதுவாழ்வுக்காதை. தமிழரின் கப்பலை ஒருநாள் உலகம் எதிர்பார்த்துப் பிழைத்தது. அவர் தம் கரம் தந்த ஆடை யவனரின், சோனகரின் மானத்தைக் காத்திருக்கிறது. ரோம் நகரத்து வீரர்கள் தமிழ் வேந்தர்களின் வாயிற் காப்பாளராக இருந்திருக்கின்றனர். தமிழகத்து வீரர்கள் கடல் கடந்து

வளமுண்டு - வாழ்வெங்கே?

அந்த நிலை கண்ணிருந்தும் குருடனைத்தான் நினைவுபடுத்துகிறது. "அவைகளைப் பயன்படுத்தி இங்கேயும் ஒரு தொழிலகம் அமைக்கக் கூடாதா? வாய்ப்புகள் பல இருந்தும் சாய்ந்து கிடக்கும் நம் பொருளாதார நிலை நிமிர்க்கப்படாதது ஏன்?" என்று கேட்டோம்.

"எங்கே தொழிற்சாலை? இலங்கைத் தோட்டங்களை—பர்மா தேயிலைக் காடுகளை வியர்வையால் 'அபிஷேகம்' செய்து வளர்க்கிருேமே, எம் தாயகத்து கனிச் செல்வத்தை இரத்தாபிஷேகம் செய்து காத்திடத் துடிக்கிருேம். எமக்கில்லையா வாய்ப்பு?" என்று கண்காணு இடத்தில் வதியும் தென்னகத்து தொழிலாளர்கள் கேட்டனர்.



தோழர் அம்பில் தர்மலிங்கம்
(திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர்)

உணர்த்தும் வண்ணம், மற்றொரு குரல் கேட்கிறது. உலோக நுணுக்க முணர்ந்த ஜெர்மன் விற்பன்னர் ஒருவர் சொல்லுகிருர், 'சேலத்திலே ஒரு பெரிய இரும்பு எஃகு தொழிற்சாலையை நிறுவ ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன' என்று. அதற்கென அவர் காட்டும் ஆணித்தரமான ஆதாரங்கள் நம்மிடை உலவும் நலிந்தோருக்கு, வடக்கத்தி ஏகாதிபத்யத்துக்குப் பலியானேருக்கு ஒரு 'நம்பிக்கை நட்சத்திர'மாகத் தோன்றுகிறது.

இரும்பு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்குத் தேவையான கனிப் பொருள் அளவுக்கு அதிகமாகவே சேலம், திருச்சி மாவட்டங்களில் புதைந்து கிடக்கின்றன என்கிருர் அவர். இதைத்தான் பூகர்ப்ப ஆராய்ச்சியாளர்களும் குறிப்பிட்டிருக்கிருர்கள். அவர்களது புள்ளி விபரம், முப்பதரை கோடி டன் இரும்புக் கனிப்பொருள் கிடைக்கக் கூடுமென்று காட்டுகிறது. இது உத்தேச அளவுதான்; இதைப் போல இன்னும் மூன்று நான்கு பங்கு அதிகமாகவும் கிடைக்கக்கூடும்; இதுவும் அவர்களது அறிக்கை தரும் உண்மையே!

தொழிற்சாலைஅமைப்பதற்கு கனிப் பொருள் மட்டும் கிடைத்துவிட்டால் போதாது; அதை உலோகமாக்கி உபயோகத்திற்குப் பயன் படுத்த சாதனங்கள் மிகத் தேவை. அவைகளில் முக்கியமான ஒன்று, அதை உருக்கி உருக் கொடுக்கும் எரிபொருள். இந்த இரண்

இந்த முறையில் தான், இன்றைய ஜெர்மனியின் இயந்திர வளர்ச்சி வளர்ந்திருப்பதாகவும் அவர் குறிப்பிடுகிருர்.

கிடைக்கக்கூடிய இரும்புக் கனிப்பொருள் தரத்திலும் குறைந்தது அல்லவாம். அதன் மூலம் எவ்வளவு உயர்ந்த ரக எஃகு வேண்டுமானுலும் உற்பத்தி செய்ய முடியும்.

மற்றும் போக்கு வரவு சாதனங்களும்—அந்த சாதாரண உதவியும், தொழிற்சாலை நிறுவுவதற்கான முயற்சிக்கு சாதகமாகவே இருக்கின்றன.

எவ்வித குறைபாடுமின்றி இந்தியாவின் நான்காவது மிகப் பெரிய இரும்பு எஃகு தொழிற் சாலையை சேலத்தில் அமைக்க முடியும்—இந்த அசைக்கமுடியாத நம்பிக்கைதான் அந்த நிபுணரின் ஒவ்வொரு எழுத்திலும் பளிச்சிடுகிறது.

தற்போது இந்தியாவில் ஆண்டு ஒன்றுக்கு பனிரெண்டரை இலட்சம் டன் எஃகுதான் சுத்தம் செய்யப்பட்டு உபயோகப்படுத்தக்கூடியதாக தயாரிக்கப்படுகிறது. இந்த அளவோடு, சேலத்தில் கிடைக்க இருக்கும் இரும்புத் தாதுக்களின் அளவை ஒப்பிட்டுப் பார்த்தால், ஒரு நிரந்தர தொழிலகத்தை இங்கே நிறுவித்தான் ஆகவேண்டும் என்ற உண்மை நிலையும் புலப்படும்!

'எங்கிருந்தோ வந்த ஒருவன் எதற்கென்றே சொல்லிப் போனவை இவை!' என்று மறுத்துவிடமுடியாது ஆட்சி

சென்றிருந்தனர் போர் பயிற்சியாளர்களாக.' என்பதை நம்மவர் புரிந்து கொண்டு விட்டனர்.

சரித்திரம் காட்டும் அந்த சாகாத உண்மைகளையும், இன்று பூகோளம் காட்டும் புள்ளி விபரங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். அதன் விளைவாகத்தான் டில்லி மூலவர்களின் முன்னே எழுப்பப்பட்டிருக்கிறது ஒரு பெரிய கேள்விக் குறி, "இந்தியாவின் அடுத்த இரும்புத் தொழிற்சாலை சேலத்திலே நிறுவப்படுமா?" என்று கேட்ட வண்ணம்.

உழைப்பின் வலிமையை—அதன் பெருமையை உணர்ந்து கொண்டு விட்டது உலகம் என்பதை ஆண்டு தோறும் நினைவுபடுத்தும் மேதினி கொண்டாடும் இன்றைய மே தினத்தில், "வைகறைக் காலையும் மஞ்சள் வெயில் மாலையுமாக நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிருேம்; அன்னை நாட்டின் மண்ணை மிதிக்கும் நாள் எந்நாள்?" என்று ஜெகமெங்கும் சிதறிக் கிடக்கும் திராவிடத்துப் பாட்டாளி மக்கள் உரத்தக் குரலெடுத்துக் கேட்கிருர்கள். அவர்களின் வாழ்வை நிமிர்த்த-'தாயகம் நோக்கி வருவீர்; வருவீர்!' என வரவேற்க-'வளமுண்டு; வாழ்வெங்கே?' என்ற நமது உரிமைக் குரல் வகை காணட்டும்! நாடாள்வோர் நெஞ்சத்தில் நல்லெண்ணம் பாய்ச்சட்டும்!

✶

புதையல்......

★ 10-ம் பக்கத் தொடர்ச்சி

அன்புள்ளங் கொண்டவர்கள் என்பதற்கு எடுத்துக் காட்டு பேராவூரணி. சாப்பாட்டுக்கு சிறிது முன் போய் பிச்சைக் கேட்டால் "இன்னும் சாப்பாடு ஆகவில்லை" என்பதும், சாப்பிட்டபிறகுபோய்க் கேட்டால்-"சாப்பாடெல்லாம் ஆகிவிட்டது!" என்பதும், சாப்பிடுகிற நேரம் பார்த்துப் போனால்— "சாப்பிடும்போது வந்திருக்கியே-பிறகுவா!" என்பதும் பிச்சைக்காரர்களுக்காக வீட்டுக்காரர்கள் தயாரித்து வைத்திருக்கிற பல்லவியாகும். அந்தப் பல்லவியை நான் பேராவூரணியிலே கேட்கவில்லை. "என்ன, பரம்பரைப் பரதேசி போலப் பேசுகிருயே!" என்று கேட்கிறீர்களா? ஏறத்தாழ ஆறுமாத காலம் பிச்சைக்கார வாழ்க்கையை நடத்தியதில் ஏற்பட்ட அனுபவமாக்கும் இது! அடைக்கலமென்று வந்தவர்களை குழந்தை போலப் பாதுகாக்கும் அன்புநெறி வளர்க்கும் பேராவூரணியில் அதிகநாள் இருக்கவில்லை நான். "ஏதாவது வேலை பாரப்பா— கூலி நிறைய கிடைக்கும்" என்று பரிவோடு பேசும் பலரை நான் அங்கு சந்திக்க வேண்டியதாயிற்று. வேலை பார்க்கக்கூடாது என்ற சோம்பேறித்தனமில்லை எனக்கு. எதிலுமே புத்தி செல்லவில்லை. ஒருவேளை, பைத்யமாகிவிட்டோமோ என்று நானே சந்தேகப்பட்டுக் கொள்வேன். வேலையை ஒழுங்காகச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை பிறக்கவில்லை. அதனால், பேராவூரணியைவிட்டு இரவோடு இரவாகப் புறப்பட்டேன்.

'வேலைபாரேன்' என்ற அன்புத் தொல்லை ஒழிந்தது. மருங்கப்பள்ளம் வந்தேன். மாதங்கள் பல ஓடிவிட்டன, என் தங்கையின்கல்லறையைப்பார்த்து! அதிலே கண்ணீர் சிந்த ஆசை கொண்டேன். கோயில் பக்கம் சென்றேன்- தங்கை புதைக்கப்பட்ட இடத்திலே அமர்ந்து ஆசை தீர அழுதேன். தங்கையின் உடலுக்குப் போர்வையாக அமைந்த மண்ணைக் கண்ணீரால் நனைத்து முத்தமிட்டேன். மீண்டும் மழை வந்துவிட்டது. நான் எதிர்பார்த்தது போல் பெருமழை. என் கந்தல் சட்டையின் கிழிந்த பையிலிலே நிரப்பி வைத்திருந்த காகிதங்களை எடுத்துக் கப்பல் செய்தேன். என் பெயரில் ஒன்று-- என் தங்கையின் பெயரில் ஒன்று -- இரண்டு கப்பல்களையும் மழை நீரில் மிதக்கவிட்டேன். கப்பல்கள் போவதைப் பார்த்து குதித்துக் கூத்தாடினேன்—சிரித்தேன்--அழுதேன்-- பிறகு, அந்த இடத்தைவிட்டு ஊர்ப் பக்கம் ஓடினேன். ஒரு வீட்டுத் திண்ணையிலே படுத்தேன். வீட்டுக்காரர் ஒரு முரடர். முன்கோபக்காரர். என்னை விரட்டினர். "என்னய்யா — இந்தப் பக்கத்திலே நீர் ஒருத்தர்தான் மோசமானவரா யிருக்கிறீர்" என்று எதிர்த்துப் பேசிவிட்டேன். அவ்வளவுதான்— ஒரே அடி—தடிக் கம்பினால் என் மண்டையிலே போட்டார். ரத்தம் வழிந்தோடியது. ஒரு தாழங்குடையை எடுத்துக் கொண்டு அவர் வெளியே அலுவலாகப் போய்விட்டார். ஓடுவதுபோல வீட்டை விட்டுக் குதித்த நானும், ஓடமுடியாமல் தத்தளித்தேன் — அப்போது அந்த முரடருடைய வீட்டிலேயிருந்து, ஒரு சின்னப் பெண்—எட்டு ஒன்பது வயதிருக்கும்-ஓடிவந்து என்னை வீட்டுக்கு அழைத்துப்போய், அதன் அம்மாவை வெட்டுக் காயத்திற்கு மருந்தெல்லாம் போடச் சொல்லி, சாப்பாடும் கொடுத்தது. சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது அதன் அப்பாவந்து விட்டார். அந்த அம்மாமீது பாய்ந்தார், 'ஏன் இந்தப்'பிச்சைக்காரப் பயலை உள்ளே விட்டாய்?" என்று! "இல்லை — பாப்பாதான் அழைச்சிகிட்டு வந்தாள்!" என்று அந்த அம்மா பெண் குழந்தையின் மீது பழியைப் போட்டார்கள்.



"...என் தங்கப் படகு கவிழ்ந்துவிட்டது...இந்த அனுதைப் படகு எப்போது கவிழுமோ..."

"பெண்ணு அழைச்சிகிட்டு வந்ததோ; பெண்ணு! உனக்கு வீட்டுக்கு மருமகனு — மாப்பிள்ளையா — உள்ளே வச்சி, உபசாரத்தோட சோறு போடுகிருயா?" என்று ஓங்கி அறைந்தார் மனைவியை. அந்தச் சின்னப் பெண்ணுக்கும் ஒரு அடி; முதுகில் 'பளார்' என்று விழுந்தது. "வீட்டுக்கு மருமகனு, மாப்பிள்ளையா?" என்று கேட்டாரே, அவர் வீட்டுக்கே நான் மருமகனுகி விடுவேன் என்று எனக்கு அப்போது தெரியாது—"

துரை, கதையில் சிறிது தொய்வை ஏற்படுத்தி விட்டு பரிமளத்தைப் பார்த்தான். அவள் முகத்தில் புதிய ஒளி வீசியது. ஆவலோடு, அவனையே பார்த்தாள் — கிழவர் பிணம்போல அசைவற்று இருந்தார்.

துரை துவங்கினன் மீண்டும்!

"இன்னும் பரிமளத்திடமே, நான் சொல்லவில்லை அந்த ரகசியத்தை. எனக்கு ஆதரவு கொடுத்து — ஆகாரமும் அளித்து — அப்பாவிடம் அடியும் வாங்கிய, அந்தச் சிறுமிதான், பரிமளா!" என்றன் துரை.

பரிமளாவின் உள்ளம் பூரிப்பால் வீங்கியது. கிழவர் மட்டும் அங்கேயில்லாமல் இருந்திருந்தால், "அத்தான்" என்று முத்துதிர்த்து அவன் மீது தாவியிருப்பாள். அவள் விழிகள் ஆனந்தக் கண்ணீர் பெருக்கின.

"பாவம்; எட்டு வயது சிறுமி அப்போது! ஏழெட்டு வருடம் கழித்த பிறகே எங்களிடையே காதல் தோன்றியது. பரிமளாவிருல் அப்போது என்னை அடையாளங் கண்டுபிடிப்பது கஷ்டம்தானே! பரிமளாவின் தந்தையால் நான் விரட்டப்பட்டுங் கூட, மருங்கப் பள்ளத்தை விட்டு நான் உடனே போக வில்லை. என் தங்கையின் கல்லறையும், பரிமளாவின் சந்திப்பும், எனக்கு சிறிது ஆறுதலாயிருந்தன. திருட்டுத்தனமாகசோறு கொண்டு வந்து தருவாள் பரிமளா. அதைச் சாப்பிட்ட பின் இருவருமாக விளையாடுவோம். இப்படி ஒரு மாதம்-பரிமளாவும் என்னைவிட்டுப் பிரிய நேர்ந்தது. பட்டுக் கோட்டையிலே உறவினர் வீட்டுக்கு சென்று, அங்கிருந்தபடி படிப்பதற்கு அவள் அப்பா ஏற்பாடு செய்துவிட்டார். பரிமளாவுக்குஅந்தநிகழ்ச்சிகள் எதுவும் இப்போது சரியாக ஞாபகமிருக்க முடியாது—சிறுமிதானே அப்போது!

எப்படியோ, அந்தச் சிறுமியின் பெரிய உள்ளத்தின்மீது, இந்தப் பிச்சைக்கார இளைஞனுக்கு ஆசை விழுந்துவிட்டது. அந்தப் பிஞ்சு உள்ளத்திலே எத்துணை பெரிய அன்புக் கோயில் கட்டப்பட்டிருக்கிறது; அந்தக் கோயிலிலே அனதையான எனக்கும்'இடம் அமைக்கப்பட்டிருக்கிறது என்று எண்ணி ஆறுதல் பெறுவேன். பரிமளா, என்னிடமிருந்து பிரிக்கப்பட்டதாக உணர்ந்தேன். வாழ்வைப் பற்றிக் கவலைப்படாமல், வேலை வெட்டி வேண்டாமென்று ஊதாரிச் சிறுவனுய் அலைந்து கொண்டிருந்த நான், எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்பட ஆரம்பித்தேன். ஆம்; பரிமளாவை நினைத்துக் கொண்டுதான்!— அவள் தகப்பனர் கேட்டாரே, "வீட்டுக்கு மருமகனு" என்று; அதைப் பூர்த்தி செய்யத்தான், பரிமளா, பட்டுக் கோட்டை போய்விட்டாள். என் வாழ்வை நேர்படுத்திக் கொண்டு அதன் பிறகு அவளை சந்திப்பதுஎன்று முடிவு கட்டினேன். அப்படித்தான் அவளை சந்தித்தேன்; ஏழெட்டு வருடங்களுக்குப் பிறகு!

அப்போது என்னைப் பரிமளா மறந்துவிட்டாள். நானும் அவளிடம் புதியவனுக வே பழகினேன். என்ன பரிமளா! சரிதானே?" என்றன் துரை. பரிமளாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. "அத்தான்" என்று கத்திவிட்டாள்! கிழவர் இப்போதும் ஒன்றும் பேசவில்லை.

"பரிமளா, படிக்கச் சென்ற பிறகு வேலை தேடிப் புறப்பட்டேன். பழையபடி பேராவூரணி போகலாமா என எண்ணினேன். அங்கு தரப்படும்வேலை பரிமளாவை சந்தித்து அவளுக்குக் கணவனுக ஆகக் கூடிய தகுதியை அளிக்காதோ— எனக் கருதி வேறு ஊர்களில் அலைந்தேன். 'இந்தச் சமயத்தில் தான் நான் மிகவும் தொல்லைப்பட்டேன். பல நாள் பட்டினி. மயக்கம்--சோர்வு—இப்படி வாடி உலர்ந்தேன். ஏதோ ஒரு ஊர். அங்கே கோயிலில் திருவிழா. அந்த ஊரின் பெயர் ராஜாமடம் என்று நினைக்கிறேன். அன்று, பகல் முழுதும் அலைந்தேன். ஒரு பருக்கை சோறு கிடைக்கவில்லை. எல்லோரும் கோயிலுக்குச் சென்று திருவிழாவைக் காண்பதிலேயும் — ஆண்டவனைத் தொழுவதிலேயும் அக்கறை காட்டினர். பசி தாங்கவே முடியவில்லை. தெருவில் தள்ளாடி நடந்து கொண்டிருந்தேன். ஒரு பெருமாள் கோவில் வாசல்-"கடவுளே! உனக்குக் கண்ணில்லையா?" என்று கதறினேன். கண்கள் சுழன்றன எனக்கு. அவ்வளவு தான்; விழுந்து விட்டேன். பிறகு எனக்கு எதுவுமே தெரியாது.

"பக்தா! எழுந்திரு!" என்ற குரல் கேட்டது-மெதுவாகக் கண்களை விழித்துப்பார்த்தேன். சிறிது தூரத்திலே ஒரு பச்சை நிறஜோதி தெரிந்தது. "எழுந்திரு பக்தா!" என்ற குரல் மீண்டும் கேட்டது. மகாவிஷ்ணு சங்கு சக்கரங்களோடு நின்று கொண்டிருந்தார். திடுக்கிட்டு எழுந்தேன்— "பகவானே! கடவுளே! என்னைக் காப்பாற்று" என்று அவர் முன்பாக ஓடினேன்.

[வளரும்]

அகிலத்து விந்தை...

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

மிகப் பெரிய டெலிஸ்கோப்பைப் பார்த்த அவருடைய மனைவி, அங்கிருந்த அதிகாரியிடம், "என்னுடைய கணவர் காகிதஉறைகளின் மேல் கணக்குப்போட்டுக் கண்டுபிடிக்கும் விஷயங்களை, நீங்கள் இவ்வளவு பெரிய கருவியை வைத்தல்லவா கண்டுபிடிக்கிறீர்கள்?" என்று வேடிக்கையாகக் 'குறிப்பிட்டார். வெற்றியின் இரகசியத்தை ஐன்ஸ்டீன் ஒரு சாம்மியம் மூலம் விளக்குகிறார்: A = X + Y+Z. A என்பது வெற்றியானால் X என்பது உழைப்பு; Y என்பது விளையாட்டு; Zஎன்பது மௌனம். இவை மூன்றும் இணையும்பொழுது வெற்றி கிட்டும் என்பது இதன் பொருள். யுத்தங்கள் பற்றி ஐன்ஸ்டீன் சொல்லுகிறார்: "முதல் உலக யுத்தம் விஷ வாயுக் குண்டுகளால் நடந்தது. இரண்டாவது உலக யுத்தம் அணுகுண்டு யுத்தமாக இருந்தது. மூன்றாவது உலக யுத்தம் ஹைட்ரஜன் குண்டு யுத்தமாக இருக்கும். ஆனால் நான்காவது உலக யுத்தம் நிச்சயம் வில்லும் அம்பும் கொண்டுதான் நடைபெறும்! ஹைட்ரஜன் குண்டு யுத்தம் உலக நாகரிகத்தையே அழித்து, கற்கால நாகரிகத்துக்கு மனிதனைத் தள்ளிவிடும்"என்கிறார்.

ஐன்ஸ்டீனுக்கு மறதி அதிகம். இரண்டாயிரம் பவுனுக்குக் கையெழுத்திட்ட 'செக்' ஒன்றை, புத்தகத்தில் படித்த பக்கம் கண்டுபிடிக்க அடையாளமாக வைத்துவிட்டு, அதோடு புத்தகத்தையே தொலைத்துவிட்டார்!

அணு சகாப்தத்தின் பிதாவான ஐன்ஸ்டீன் அமைதியே உருவானவர். தன்னுடைய வாழ்நாளிலேயே தன்னுடைய கண்டுபிடிப்புகள், அழிவு வேலைக்கு பயன்படுவதைக் கண்டு மனம் புழுங்கியவர். அதன் காரணமாகவே அமெரிக்கப் பாசிச வெறியர் செனேட்டர் மக்கார்தியோடு பலமுறை மோதியிருக்கிறார். அவர் மரணம் விஞ்ஞான உலகைவிட அமைதியை விரும்பும் அறிஞர் உலகுக்குப் பெரும் நஷ்டம்! அவரை இழந்து வருந்தும் இந்த நேரத்தில், "அமைதிப் பாதையில் உலகம் செல்லாவிட்டால் மனித நாகரிகமே பூண்டற்று அழிந்து போகும்" என்ற அவருடைய எச்சரிக்கை, மனித நலனில் நாட்டம் கொண்டுள்ள ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டிய ஒன்றாகும். வாழ்க ஐன்ஸ்டீன் புகழ்! வளர்க சமாதான முயற்சி! ஃ

தோழர்
இ. ல. ம. சவுந்தரபாண்டியன்
(ராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. செயலாளர்)

கிரேக்கப் புராணம்...

★ 6-ம் பக்கத் தொடர்ச்சி

புண்ணாக்கிவிட்டது! அவன் விழித்துக்கொண்டான். "அவசரத்தால் ஆபத்தை அணைத்துக் கொண்ட ஆரணங்கே! உன் தமக்கையர் கட்டிவிட்ட கதையைப்போல நான் பேயல்ல; பிசாசுமல்ல! கைப்பிடித்தணைத்து நான் தரும் முத்தத்திற்காக மங்கையர் உலகமே காத்துக் கொண்டிருக்கிறதே, அந்த கியூப்பிட் நான்தான்!"—என்று சொல்லிவிட்டு அவன் மறைந்தான்! சைச்சிற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. 'மன்மதனே என் மணவாளனாக வந்தபோது, மந்த மதியினால் அவனை உதைத் தெறிந்து விட்டேனே!"—என்று கண்ணீர் வடித்தாள்! அவனைக் கண்டு மன்னிப்பு பெறாமல் திரும்புவதில்லை யென்ற உறுதியோடு அவள் புறப்பட்டாள்!

கியூப்பிட் தன் தாயார் வீனசின் வீட்டிற்குத்தான் போயிருக்க வேண்டும்—என்கிற நோக்கத்தில் சைச் வீனசைத் தேடி ஓடினாள்.

தன்னுடைய போட்டிக்காரி தன்னுடைய பாதங்களிலேயே சரணாகதி யடைவதைக் கண்டு வீனசுக்கு ஒரே மகிழ்ச்சி! தன் மகன் அவளுக்கு வேண்டுமென்றால், அவள் பணிக்கும் மூன்று வேலைகளைத் தவறாமல் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டாளாம்!

விக்ரமாதித்தன் கதையில் வருவது போலவே வீனஸ் விதித்த ஆணைகளும் சுவையாக இருக்கின்றன. முதலாவதாக எள்ளினும் சிறிய மூன்று தானியங்களைக் குவித்து, அன்று பொழுது விடிவதற்குள் அவைகளைத் தனித்தனியாகப் பிரித்தெடுக்க வேண்டுமென்றும் ஆணையிடுகிறாள்! அவளுக்குப் பரிதாபப்பட்டு எறும்புகளெல்லாம் அவளுக்காக இந்த வேலையைச் செய்து முடித்தனவாம்!

இரண்டாவதாக, வெள்ளிக் கரைசல் நீராக ஓடும் ஆற்றங்கரையொன்றில், தங்க ரேக்குகளை ரோமங்களாகக் கொண்ட செம்மறியாடுகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன. அவைகளின் ரோமங்களில் ஒரு கொத்து அவசியம் தனக்கு வேண்டுமென்று உத்தரவு போட்டாள்! அந்த ஆடுகளோ மதயானைகளைப் போன்ற வலிமை கொண்டவை. பாவம், சைச் என்ன செய்வாள்! ஆற்றங்கரை யோரத்தில் அவள் அழுது கொண்டிருந்தாள். அங்கே வானோக்கி வளர்ந்திருக்கும் நாணற் புல்லுக்கு அந்தக் குயிலின் அழுகுரல்கேட்டு மனமிளகிவிட்டதாம். உடன் அவை தங்க ரோமங்களைப் பெற அவளுக்கு உதவி புரிவதாக வாக்களித்தன. இரவுக் காலத்தில் அந்த ஆடுகள் புதரிலே ஒண்டும்போது, நாணற் புற்கள் அவைகளுக்குத் தெரியாமலேயே ஒரு கொத்து ரோமங்களைப் பிடுங்கி அதை சைச்சிடம் கொடுத்தன.

தங்க ரோமங்களைப் பார்த்ததும் வீனசின் அங்கமெல்லாம் ஆச்சரியத்தால் ஆட்டம் கொடுத்தது. இதுபோன்ற காரியங்களை அவளால் சாதிக்க முடியாது; காதல் நோயால் வாடி அந்தத் தளிர் நிகர் மேனியாள் வாடி விடுவாள்; பின்னர், தான் போட்டியின்றி அழகு சாம்ராஜ்யத்தில் செங்கோல் செலுத்தலாம்—என்று எண்ணியிருந்த வீனசுக்கு இந்தச் செய்தி திகைப்பைத் தராமல், தித்திப்பாகவா இருக்கும்?

காலம் ஓடியது. கியூப்பிட்டிற்கு புண் ஆறிவந்தது. ஆனாலும் அவன் உள்ளத்திலே சைச் உண்டாக்கிய காதல் புண் ஆறவில்லை! காதலுக்குத்தான் உயர்வு தாழ்வு கிடையாதே! ஆண்டவனே அதற்குப் பலியானதில் ஆச்சரியமொன்றுமில்லை தான்!

தன் காதலி அம்மாவிடம் அடிமையாக இருப்பது தெரிந்து அவன் நெருப்பாகச் சீறினான். உடன் சியசுக்கு மனுப்போட்டு, தேவருலக பொதுச் சபையைக் கூட்டினான். அதிலே அம்மாவின் விருப்பத்துக்கு மாறாக தான் சைச்சைத்தான் மணக்கப் போவதாகவும், அவளுக்கு தேவலோக 'பிரஜாஉரிமை' வழங்க வேண்டுமெனவும் உரிமை முரசு தட்டினான்.

கியூப்பிட்டின் வாலிப வேட்கையைத் தணிக்க கடவுளர்களுக்கு மனம் வரவில்லை. அவன் மனம் கோணினால் பூலோக வாசிகளெல்லாம் காதலென்பது இன்னதென்று தெரியாமல், மானிட வாழ்க்கையின் பெரும் பகுதியைச் சுவைக்க முடியாத சோக நிலைக்கு ஆளாவாரே—என்ற கலக்கம் வேறு அவர்களை மிரட்டியது. எனவே எல்லோரும் சேர்ந்து கியூப்பிட்டின் காதல் மணத்துக்குச் சம்மதித்தனர். பின், வீனசும் மனம் மாறி சைச்சை தன் மருமகளாக்கிக் கொண்டாள்!

இதுதான் கிரேக்க புராணத்தில் மதனும் ரதியும் ஒன்றுகூடிய கதை! அங்கெல்லாம் இப்போது அழகான உருவத்தை வர்ணிக்க சாதாரண உவமையாகத்தான் 'கியூபிட்' என்கிற வார்த்தையை உபயோகிக்கிறார்களேயன்றி, கிளிப்பரி பூட்டிய தேரில், தெம்மாங்கு பாடும் தென்றலைத் தூதாகப் போக்கி, கரும்பு வில்லில் காதல் கணை பூட்டும் மன்மதனை உருவாக்கி, அவனுக்கு ஆண்டு தோறும் காமுண்டித் திருவிழா கொண்டாடுவதில்லை! இன்று கிரேக்கத்திலே—அந்த நாகரிகம் பரவி நிற்கும் ஐரோப்பாவிலே கியூப்பிட்டிற்காக 'எரிந்த கட்சி' 'எரியாத கட்சி' கிடையாது—அதைக் கொண்டு வாழும் எத்தர் கூட்டமும் அங்கு இல்லை!

★

(தலையங்கம் தொடர்ச்சி)

முறையில் ஆங்காங்குள்ள **தி. மு. கழகக் கிளைகள், தொழிலாளர் பகுதிகளில் பணிபுரிந்து, தொழிலாளர்களை ஒன்று திரட்டும்படிக்கும்,** தொழிற் சங்க அமைப்புக்கான சூழ்நிலை ஏற்படுவதை அவ்வப்போது தி. மு. கழகத் தலைமை நிலையத்துக்கு அறிவிக்கும் படியும் இக்குழு கேட்டுக் கோள்கிறது"

முன் மொழிதல்:— ராசமாணிக்கம்
வழிமொழிதல்:— பராங்குசம்

இந்தத் தீர்மானத்தின்படி ஆங்காங்கு நமதுதோழர்கள் பணியைத் துவங்கி விட்டார்கள் என்பதற்கு அறிகுறிதான் வெற்றிகரமாக நடைபெற்ற மேதின விழாக்களாகும்.

மேதினம்—விழாச் சிறப்போடு முடிவடையாமல், விறுவிறுப்போடு தொழிலாளர் மத்தியிலே பணிபுரியும் ஊக்கத்தையும் கழகத் தோழர்களுக்கு அளித்திருக்குமென்று நம்புகிறோம். திராவிட நாட்டின் விடுதலையை அடிப்படையாக வைத்து, திராவிடத் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பெறும் முன்னணிகளை நடத்திச் செல்லும் நேரடிப் பொறுப்பையும், தி. மு. கழகம் ஏற்றுக் கொள்வதற்கான முன்னறிவிப்புதான் பேரூர் பொதுக்குழுவின் தீர்மானமாகும். அந்தத் தீர்மானம் வெற்றிபெற-நடைமுறையில் இறங்க வேண்டும் தோழர்கள் இன்னும் உற்சாக-இன்னும் ஊக்கமாக-என்பதற்கு இந்த மே நாள் விழா ஒரு தூண்டுகோலாக அமையட்டும்-வாழ்க தொழிலாளர்! வருக தனியரசு! திராவிடநாடு திராவிடருக்காக, திராவிடத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள் !

ஒரு ரூபாய்...

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டிருந்த சாக்கடையிலே விழுந்தேன்...சாக்கடையிலே சிக்கிக் கொண்டிருக்கும் என்னை என்றாவது ஒரு நாள் யாராவது மீட்டு விடுவார்கள். ஆனால் சமுதாயச் சாக்கடையிலே சிக்கிச்சீரழியும் அவளை யார் மீட்கப் போகிறார்கள்? பாழடைந்து போன அவள் வாழ்வை யார் வளமாக்கப் போகிறார்கள்? அந்த சாக்கடையிலே ஊறி ஊறி நாற்றமடித்து நாசமாக வேண்டியதுதானா அவள் வாழ்வு?

சாக்கடையிலே சிக்கியிருந்த என்னை 'தோட்டி' மீட்டான். ஆனந்தம் அவனுக்கு, முழுதாக ஒரு ரூபாய் கிடைத்ததே என்று... அவன் மகனுக்கு உடம்பு சரியில்லையாம்-'காப்பு'க்கட்டினால் குணமாகிவிடுமாம்...நான் ஆண்டவனால் அவனுக்கு உதவ அனுப்பப்பட்டேனாம்...அவனுக்கு என்ன தெரியும் என் சீரழிந்த கதை...! என்னை அவன் மகனுக்குச் சுற்றி 'ஆண்டவனே! இதோ உன் காணிக்கை—உன் உண்டியலிலே சேர்த்துடரேன் — என் மவனைக் காப்பாத்து' என்று கூறி, என்னை திருப்பதி கோயிலின் உண்டியிலே போட்டுவிட்டான்...!

இத்தனை நாள் பேசும் மனிதர்கள் எனக்கு எஜமானர்களாக இருந்தனர். இன்றோ பேசா கற்சிலை எனக்கு முதலாளி...!ஆயிரம், ஆயிரம் என் உறவினர்கள் துரு பிடித்து-'பாசை' நோய் பிடித்து படுத்திருந்தனர். காலம் ஓடிக் கொண்டேயிருக்கிறது... இதோ, என் உடல் எல்லாம் 'துரு' நோய்! 'பாசை'யும் படர ஆரம்பித்து விட்டது,என் பளபளக்கும் மேனி எல்லாம்! அந்த கஜானா சிறை எவ்வளவு மேல்! என் மேனி கெடாமல் பாதுகாத்தார்கள். என் விடுதலை தாகத்தின் கோர முடிவு...இன்னும் சில நாளில்... நான் மறைந்து விடுவேன்...என் இனத்தவருக்கு நான் விடுக்கும் கடைசி செய்தி இதுதான்: "உலகத்தின்எந்தக்கோடிக்கும் உருண்டோடுங்கள். ஆனால், ஆண்டவனின் உண்டியலிலே மட்டும் சிக்கிக்கொள்ளாதீர்கள்"

★

இயல் இசை கூத்து

அறிஞர் அண்ணாவின் காவியமான 'கலிங்கராணி' நாடகவடிவு கொள்ளப் போகிறது. எம். ஜி. ஆர். நாடக மன்றத்தார் 'கலிங்கராணி'யை விரைவில் அரங்கேற்றப் போகிறார்கள்.

குன்றத்தூர் படிப்பக நிதிக்காக 2-5-55-அன்றும், **3-5-55**-அன்றும் முறையே ராஜேந்திரன் நாடக மன்றத்தினரின் '**மகாராணி**' நாடகமும், கலைவாணர் என். எஸ். கே.யின் '**தளபதி**' நாடகமும் வெற்றிகரமாக நடைபெற்றன.

அனல் வீசும் வசனங்களையே பேசிப் பழக்கப்பட்ட ராஜேந்திரன் கொச்சைத் தமிழ் பேசும் குதிரைக்காரனாகத் தோன்றி, ஆடிப்பாடி, 'மகாராணி' நாடகத்தில் புதிய பாகமேற்றிருக்கிறார்.

மு. க. வின் '**மணிமகுடம்**' நாடகத்திற்கான பூர்வாங்க வேலைகளெல்லாம் முடிந்து விட்டன. அநேகமாக மே கடைசி வாரத்தில் மதுரைமாநகரில்— மணிமகுடம் நடைபெறலாம்!

இசையரசு தண்டபாணி தேசிகர் அவர்கள் அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் இசைப் பேராசிரியராகவும், சிண்டிகேட் உறுப்பினராகவும் நியமிக்கப் பட்டிருக்கிறார். இதன் மூலம் இசை அரசு அவர்களின் கலைத்துறைப் பணிக்கு ஆக்கம் தரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பெருமக்களது பாராட்டுகளை உரிமையாக்கிக் கொள்கிறது.

கொடிய கரங்களை நீட்டுகின்றனர். அந்தத் தடைகள் உடைபட வேண்டுமென்று அமைச்சரின் முன்னிலையில சம்மந்தப்பட்ட அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்"—என்று குறிப்பிட்டார்.

சஸ்பென்ஸ்!

எல்லாப் படங்களிலும் கனவு சீன் காட்டப்பட்டு "போர்" அடிக்கிறதே என்று ஆத்திரப்பட்ட ஓர் டைரக்டர், தனது படத்தில் கனவு சீன் வைப்பதில்லை என்று முடிவு கட்டினார். அதோடு, கனவு சீன் வருகிறது என்பது போல மக்களுக்குக் காட்டி, கனவு சீன் இல்லை, பொழுது விடிந்து விட்டது என்று "சஸ்பென்ஸ் கிரியேட்" செய்யவும் விரும்பினார்.

ஒரு பெண் காதல் நினைவோடு படுக்கையிலே சாய்கிறாள், விளக்கை அணைத்து விட்டு! கேமரா, அவளுடைய முகத்திற்குப் போகிறது. 'குளோசப்' காட்சி! அந்த முகத்திலேயே கடிகாரமுள் சுற்றுவது "டபிள் பிரிண்ட்" போடப்பட்டு, சேவல்கோழி கூவுவதையும் காட்டி,சூரியஉதயத்தையும் இணைத்து, அவள் எழுந்து விடுகிறாள் என்று காட்சியை சித்தரித்திருந்தார்.

"அருமையான சஸ்பென்ஸ்" என்று ஜனங்கள் பாராட்டுவார்கள் என அவர் நினைத்தார். படம் பார்த்த மக்கள் என்ன தெரியுமா சொன்னார்கள்?

"கனவு சீன் ஆயிரம் அடி எடுத்தாலும்—சகிக்கவில்லையாம்—கடைசியாக அதை வெட்டி விட்டார்களாம்—அதனால்தான் கதாநாயகி தூங்கியதும் எழுந்து விடுவது போல இருக்கிறது" என்பதாக பேசிக்கொண்டார்கள்.

—மிஸ்டர். நாமே—

சீனத்துச் சருகு...

✶ 2-ம் பக்கத் தொடர்ச்சி

பகலிலே தயிர் விற்று, இரவிலே உடல் விற்று—அப்படியாவது வாழமுடியாதா என்கிற முடிவுக்கு வர வேண்டிய எண்ணற்றதளிர்க்கொடிகள், அங்கே மே தினத்துக்கு, தொழிலாளி வர்க்கம் மேன்மை பெற்ற தினம்—என்று பொருள் கூறுகிறார்கள்!

'சைனிஸ் லிட்டரேச்சர்' கூறுகிற வேங் பாட்டியைப் போல வேதனைச்சகதியிலே சிக்கித்தவித்த தவரெல்லாம் இன்று பளிங்குத் தரையிலே நடைபழகுகிறார்கள்!

சன்யாட்சன் தோண்டிய ஜீவநதி ஒன்று கலந்த பின்னர் தான் அன்று நாற்றமெடுத்திருந்த சமுதாயக் கடல் இன்று சர்க்கரைப் பொங்கலாகத் தித்திக்கிறது!

சியாங்கே ஷேக் என்னும் சிறுத்தை மறைந்த பின்னர்தான் சீனாவிலே சுகவாழ்வு மலர்ந்திருக்கிறது!

கொமிண்டாங் என்னும் கொள்ளையர் கூட்டத்தின் குரல்வளை நெறிக்கப்பட்ட பிறகு தான் அங்கே சருகுகள் தளிராக—நெருஞ்சிகள் பஞ்சணையாக மாறியிருக்கின்றன!

இந்த வேங் பாட்டிகள் மாடாய் உழைத்து, ஓடாய் தேய்கின்றனர். இன்னும் சியாங்கே ஷேக்குகளுக்கு பார் மோசா காட்டப்படவில்லை; கொமிண்டாங் கும்பலின் காட்டு ராஜா தர்பார் தடையேதுமின்றி நடந்தபடிதான் இருக்கிறது!

ஆரியம் என்கிற பெயரால், வடநாட்டு சுரண்டலியம் என்கிற திரைமறைவில் பதுங்கியிருக்கும் அந்தக் கொடியவர் கூட்டணி குப்புற வீழ்த்தப்பட வேண்டும்! அப்போதுதான் திருவிடத்திலே சருகுகள் தளிராகும்! நம்மைக் கொத்தி வாழும் கழுகுகளின் கண்கள் குருடாகும்! அப்போததான் இங்கும் தொழில் பரிமாற்றுத் திட்டங்கள் உண்டாகி திராவிடம் சீனாவாகும் —(மா.)

கொள்கை வளருது கோபுரம் போலே!

பெங்களூர்-7
மக்கள் மறுமலர்ச்சி மன்ற சார்பில்
2499-வது புத்தர் ஆண்டுவிழா
8—5—55
தலைவர்:
எஸ். கே. ஜகதீசுவரி, பி. ஏ.,
பேசுவோர்:
ஜி. அப்பாதுரை
எம். எஸ். ராமசாமி

நாகை
(அழகிரி சொற் பயிற்சி மன்றத்தின் சார்பில் பேச்சுப் பயிற்சி).
8-5-55
தலைப்பு: புதிய பாதை
கலந்து கொள்வோர்:
பாண்டியன்
சித்ரவேலு
ராமன், ஜோசப்,
சுப்பையா, ராசன்.

வாணியம்பாடி
[மே தினக் கூட்டம்]
7—5—55
பேசுவோர்:
சம்பத்
முல்லை வடிவேல்
முல்லை சத்தி
எம். நடேசன்

குடந்தை
(மே தினக் கூட்டம்
8—5—55
பேசுவோர்:
பூங்கோதை
அருண்மொழி
சு. பத்மனாதன்

இராசபாளையம்
(டாக்டர் அம்பேத்கார் திடல்)
8-5-55
பேசுவோர்:
தில்லை வில்லாளன்
ப. க. பாண்டியன்

வேலூர்
(வ. ஆ. மாவட்டம்)
8-5-55
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு, ப. உ. சண்முகம்

முகவரி மாற்றம்

தோழர் சிற்றரசு திருச்சியிலிருந்த அலுவலகத்தை சென்னைக்கு மாற்றி விட்டார். இனி அஞ்சல் எழுதும் அன்பர்கள், சி. பி. சிற்றரசு, நெ. 31, தையப்ப முதலித் தெரு, மண்ணடி, சென்னை-1 என்ற முகவரிக்கு எழுதவும்.

தோழர்
ஜி. பி. சோமசுந்தரம்
(சேலம் மாவட்ட தி. மு. க. செயலாளர்)

வெள்ளிவீதி

ஆசைத்தம்பி கதை—வசனமெழுதும் மெர்க்குரி பிலிம் சாரின் படம் சென்ற வாரம் நியோட்டோன் ஸ்டுடியோவில் துவங்கியது. ஆரம்பவிழாவிற்கு மந்திரி ராமநாதபுரம் ராஜா தலைமை வகித்தார். விழாவில் கலந்து கொண்ட திரு. வி. வி. ராமசாமி அவர்கள் பேசும்போது, "சமூக சீர்திருத்தம் இப்போது மேடையைத் தவிர, திரையையும் ஒரு சாதனமாகக்கொண்டு புயல் வேகத்தில் வளர்ந்து வருகிறது. இருந்த போதும் திரையுலகில் அதன் வளர்ச்சியைத் தடுக்க அரசினர் சட்டத்தின்

செங்கொடி சரித்திரம்!

சிகப்பு வர்ணம்—சீரழிந்த பாட்டாளி மக்கள் சிந்திய செந்நீர்த் துளிகளிலே பிறந்தது! அது ஒடுக்கப் பட்டவர்களின் விடுதலைப் பட்டயம்! இன எழுச்சியால் உந்தப் பட்டோரின் உணர்ச்சிக் குறி!

இந்தச் செங்கொடியின் வரலாறு தெரியுமா, உங்களுக்கு?

முன் காலத்தில் மக்கள் சமுதாயத்துக்கு எதிரான இராணுவ, வாயடைப்புச் சட்டங்களை அரசாங்கங்கள் அமுல் நடத்த விரும்பினால் உடன் அவர்கள் செங்கொடியை உயர்த்துவார்கள்!

ஆணவத் திமிரின் அறிவிப்பாய் இருந்த சிகப்பு வர்ணம் உரிமை கீதத்துக்கு உற்றதொரு பண்ணாய் அமைந்தது முதன் முதலில் பிரான்சு நாட்டில்தான்!

பிரெஞ்சுப் புரட்சியின்போது பாரிஸ் கம்யூன்தான் பொதுமக்களின் சார்பாக செங்கொடியை உயர்த்தியது! அதற்குப் பிறகுதான் உரிமை முரசு தட்ட விரும்புவோர் செந்நிறத்தை சுவீகாரம் செய்து கொண்டனர்!

'எழுத்தாணி'

இந்த வாரம் பரிசு பெறும் தோழர் :
(●) கே. எம். நாகூர், சொகூர், மலாயா.

அப்துல் ஹை; அரகண்டநல்லூர்.

(?) இளமை என்பது என்ன?

'தவறு'கள் விளையும் கழனி!

(?) அனுதாபத்திலிருந்து பிறப்பது எது?

"த்சு த்சு" என்ற ஒலி!

(?) சிக்கனம் என்பது என்ன?

தரித்திரம் அடை காக்கும் முட்டை. பணக்காரர்கள் அடைகாத்தால் அது 'கருமித் தனம்' என்ற குஞ்சாக வெடித்து விடுகிறது!

(?) நம் நாடு என்ன செய்தாலும் முன்னேறாது என்று நினைக்கிறேன், உங்கள் கருத்து என்ன?

நீர் நினைப்பது தவறு. நம்மைவிட பின்னேறிக் கிடந்த சீனாவிலே ஜோதி கிளம்பியிருக்கிறதே!

நிஷார் அஹமத்; ஊத்தங்கரை.

(?) அண்ணாதுரையே தி. மு. க. விலிருந்து விலகி விட்டாராமே?

அண்ணா விலகவில்லை. அவர் இந்தத் தடவை பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிடவில்லை. மற்றவருக்கு வாய்ப்பளித்தார். அவ்வளவுதான்!

(?) ஜனநாயகத்தின் கண்ணோட்டத்தில் நேருவின் தோற்றம் எப்படியிருக்கும்?

சிலர் நினைப்பதைப்போல அவர் தோகை மயிலாகக் கூட காட்சி அளிக்கலாம். ஆனாலும் அந்தத் தோகையிலே சுடு சோற்களால் அவர் பிடுங்கி யெறிந்த திராவிடர்களின் விழிகள்தான் கனல் கக்கிக்கொண்டிருக்கும்!

அருட்பிரகாசம்; கொழும்பு-10.

(?) இலட்சியமில்லாத மனிதனின் வாழ்வு எப்படியிருக்கும்?

நிலா இல்லாத வானம் போல் நிர்வாணமாக இருக்கும்!

சுந்தரராசப்பெருமாள்; விருதை.

(?) இறந்த ஒரு ஜீவனை இந்த உலகம் என்ன செய்ய முடியும்?

சிலை வைத்து, அந்த ஜீவனின் இலட்சியத்தை சிறை பிடிக்க முடியும்!

சண்முகசுந்தரம்; ஊத்தங்கரை.

(?) நேருவின் சிரிப்பு எத்தனை வகைப்படும்?

அது பல வகையாக இருந்தாலும், மயக்குக்காரர்களின் சிரிப்புக்கு எப்போதும் ஒரே அர்த்தம்தான்!

சி. முத்துசாமி; வேடசந்தூர்.

(?) தி. மு. கழகம் வருகிற பொதுத் தேர்தலில் கலந்து கொள்ளுமா?

இது பற்றிய நல்ல முடிவுகளை வருகிற மாநில மாநாடு அறிவிக்கும்!

(●) கே. எம். நாகூர்; சொகூர்; மலாயா.

(?) அந்தஸ்து என்றால் என்ன? அது எப்படி இருக்கும்? எங்கே கிடைக்கும்?

அது ஒரு புதுமையான நிலவு. பணக்காரர்கள் அதைப் பந்தாக உருட்டி விளையாடுகிறார்கள். ஏழைகள் அதன் உருவை நிலைக் கண்ணாடியில்தான் பார்க்க முடியும்!

டி. பெருமாள்; பூனா.

(?) மனிதன் குரங்கிலிருந்து வந்தவனானால், குரங்குகளும் பின்னர் மனிதனாகுமா?

ஆமாம்; பரிணாமம் நடந்து கொண்டுதானிருக்கிறது. காலக்கிரமத்தில், மாற்றங்களுக்குட்பட்டு, மனிதன் கூட இன்னும் உயர்ந்த பிராணியாக வளர்வான்! இதற்கு இன்னும் எத்தனை கோடி ஆண்டுகள் தேவையோ?

தேவராசன்; லால்குடி.

(?) தியாகி என்றால் என்ன பொருள்?

மனிதருள் உயர்ந்தவன் என்று பொருள்! தேசியத்தாரின் அகராதியில் அதற்கு 'ஐந்து ஏக்கர்' என்று பொருள்!

கணேசன்; விளநகர்.

(?) தனது அரசியல் கொள்கையை கைவிட்டு, காங்கிரசில் கலந்து விடும் நிலையிலிருக்கும் கட்சியின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

அதையும் ஒரு செப்படி வித்தையாக மாற்றிவிடும் தைரியம் அதன் தலைவர்களுக்கு இருந்தாலும், அவர்களுக்கு எதிர்காலம் கொஞ்சம் கூட இருக்காது! கடந்த காலத்தை வைத்துக் கொண்டுதான் காலட்சேபம் செய்யவேண்டும்!

சிதம்பரம்; புரசை.

(?) காந்தியார் கொல்லப் படாதிருந்தால்... ?

தன் சீடர்களின் செயல் கண்டு அவர் தற்கொலை செய்து கொண்டிருப்பார்!

தங்கராசன்; சிலாபம்; சிலோன்.

(?) கிருஸ்தவர்கள் உங்கள் கட்சியில் சேருவதில்லை—என்கிறார்களே; அது உண்மையா?

யார் சொன்னது அப்படி? நீதிக் கட்சியின் பேழையாக இருந்த பன்னீர்செல்வம் ஒரு கிருஸ்துவர்தான்! ஏன்; சமீபத்தில் நடந்த டால்மியாபுரப் போராட்டத்தில் செபாஸ்டின் என்னும் தோழன் தன் குறியிடத்தில் துப்பாக்கி குண்டேந்தி, எங்கள் தியாகியர் பட்டியலை நீட்டியிருக்கிறான்!

நரசிம்மன்; சித்தூர்.

(?) பாண்டுங் மாநாட்டுக்குப் போயிருந்த நேரு அங்கும் தலையணையைத் தூக்கி எறிந்து விளையாடினாரா?

இல்லை; அங்கு வந்த பத்திரிகைக்காரர்கள் 'கேமரா' கொண்டு வரவில்லையாம்—அதனால்தான் விளையாடவில்லையாம்!

கோபால்; உடையார்பாளையம்.

(?) அரசியலில் வான் கோழிகள் இருக்கிறார்களா?

ஆமாம்; தென்னாட்டிலே அந்த 'வான்கோழி'களுக்கு தடித்த மீசையும் முளைத்திருக்கிறது!

குருச்சந்திரன்; திரிகோணமலை.

(?) ஆச்சாரியார் இறந்தால் அவர் ஆவி எங்கே போகும்?

எங்கும் போகாது; டெல்லி செகரேட்டரியேட்டையும், சென்னை சட்டசபையையும் தான் வட்டமிட்டுக் கொண்டிருக்கும்!

வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது!

மதமும் மூட நம்பிக்கையும்

[இங்கர்சால்]

தமிழ்த் தழுவல் ஆசிரியர் :

நாவலர் **இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.**

விலை ரூ. 1-0-0

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் : : திருச்சி

உங்கள் பார்வை

கவிஞர் சிறப்பிதழ் பதினாறு பக்கங்கள் தான்; ஆனால் அவ்வளவும் பயனுள்ள பக்கங்கள்.

—இரா. தம்பி,
தல்லாகுளம், மதுரை.

'ஏடா தம்பி எடுடா பேனா' என்று 'அண்ணா' அவர்கள் கூறுவதும், 'கொலைவாளினை எடடா' என்று பாரதிதாசன் அவர்கள் கூறினார் என்று அன்பழகன் அவர்கள் கூறுவதும் கண்ணுற்றநான், எதை எடுப்பது என்பதறியாது பிறகு 'முரசொலி'யினையே எடுத்துவிட்டேன் கையில்!

— பி. தேவராசன்,
கடப்பாக்கம்.

நாவலர் பாரதியாரின் வாழ்த்து மலருக்கு ஓர் அணி.

—மதிவாணன்,
தங்கசாலை, சென்னை.

'அவாள்' பத்திரிகைகள் அய்யங்காரும், சாஸ்திரிகளும், பிறந்த தினத்தை மலர்களாக வெளியிடுகிற நேரத்தில் தாங்கள் இத்திங்களில் புரட்சிக் கவிஞர் மலர் வெளியிட்டதைக் கண்டு அக மகிழ்ந்தேன்.

—ஏ. கே. நடராசன்,
சென்னை-5.

முரசொலியில் குறளோவியம் இடம் பெறாமல் இருப்பதற்கு மிக வருத்தம் அடைகிறேன்.

—முரசொலி அன்பன்,
பொள்ளாச்சி.

"காதலிலே...திராவிடமே மூச்சு" என்பதுபோல, தலையங்கம் திராவிடத்தின் மூச்சாகவே இருக்கிறது. 'கடல் கடந்தோர் கடிதம்' கண்டால் எதிரிகளின் உடல் நடுங்கும், நிச்சயம்!

—கே. எஸ். மதியரசு,
செந்துறை.

"முரசொலி"யிலே இன்னும் ஒரே குறை. அதுதான் சொற்பயிற்சி என்றொரு பகுதி தேவை. சொற் பயிற்சி மூலம் கடல் கடந்த எங்களுக்கு-குறிப்பாக சொற் பயிற்சியற்றவர்களை சொற்பொழிவாளர்களாக்கும் திறனை ஊட்ட சொற் பயிற்சி, என்றொரு பகுதி அவசியம் தேவை.

—க. ப. சிவம்,
கண்டி, இலங்கை

முரசொலியின், இயல் இசைக் கூத்து உண்மையில் எங்கள் இதயத்தை இழுத்து விட்டது.

—குமார்,
பாம்பன்.

ஓராண்டுக் குழந்தை பேசும் மழலை மொழி. கேட்போர் எத்தகையவரானாலும் எப்படிக் கவருகின்றதோ அதே போன்று நம் முரசொலியும் தன் வளர்ச்சியில் உணர்ச்சி மிக்க பல புதிய பகுதிகளுடன் மிளிர்கின்றது.

—மணிமேகலை,
கண்டி, இலங்கை.

சென்ற இதழின் முகப்பு சித்திரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால், பண்டைய கால நெடுஞ்செழியனைப் பார்ப்பது போல் இருக்கிறது.

—பி. கோவிந்தசாமி,
சென்னை.

Edited, Printed and published by M. Karunanithi at Murasoli Press, 4/128, Mount Road, Madras-6.